بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

தொகுதி 9

இதழ் 35

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1445 - ஸஃபர் 23 ★ ஹிஜ்ரீ ஷம்ஸி 1403 - ஸஹூர் 23 ★ 2024 ஆகஸ்ட் 29

## அல்லாஹ்வின் கட்டளை

وَهُوَ الَّذِيْ مَدَّ الْاَرْضَ وَجَعَلَ فِيْهَا
رَوَاسِيَ وَاَنْهٰرًا ۭ وَمِنْ كُلِّ الثَّمَرٰتِ جَعَلَ
فِيْهَا زَوْجَيْنِ اثْنَيْنِ يُغْشِي الَّيْلَ النَّهَارَ ۭ
اِنَّ فِيْ ذٰلِكَ لَاٰيٰتٍ لِّقَوْمٍ يَّتَفَكَّرُوْنَ ۝

மேலும் அவனே பூமியைப் பரப்பி அதில் மலைகளையும், ஆறுகளையும் அமைத்தான். மேலும் அதில் எல்லா (வகைப்) பழங்களையும், ஆண் பெண் என இரட்டையாக ஆக்கினான். அவன் இரவால் பகலை மூடச் செய்கிறான். சிந்திக்கும் மக்களுக்கு இதில் (பல) அடையாளங்கள் உள்ளன.

(அர்-ரஅத்: 4)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## எவர் தொழுகையில் இன்பத்தை பெறவில்லையோ அவர் ஈமானின் சுவையை சுவைக்கவில்லை என்பதை நினைவிற் கொள்ளுங்கள்

## இறைவனுக்கு முன்னால் தொழுகையில் மன்றாடக் கூடியவர் (இறை) பாதுகாப்பில் இருக்கின்றார்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

மனிதனின் தூய்மையான வாழ்விற்கான உயர்ந்த அளவுகோல் தொழுகை ஆகும். இறைவனுக்கு முன்னால் தொழுகையில் மன்றாடக் கூடியவர் (இறை) பாதுகாப்பில் இருக்கின்றார். உதாரணமாக, ஒரு குழந்தை தனது தாயின் மடியில் கதறி கதறி அழுகின்ற போது அது தனது தாயின் அன்பு மற்றும் பரிவை அது உணர்கின்றது. அதேபோன்று தொழுகையில் உருக்கத்துடனும், மன்றாடலுடனும் இறைவனுக்கு முன்னால் அழுது துஆ செய்யக் கூடியவர் தன்னை ரூபூபிய்யத்தின் கருணைக்குரியவராக ஆக்கிக் கொள்கின்றார். எவர் தொழுகையில் இன்பத்தை பெறவில்லையோ அவர் ஈமானின் சுவையை சுவைக்கவில்லை என்பதை நினைவிற் கொள்ளுங்கள்!

தொழுகை என்பது வெறும் குனிந்து எழுதுவதன் பெயர் அல்ல. சிலரோ தொழுகையை கோழி (இரையைக்) கொத்துவதைப் போன்று வேக வேகமாக குனிந்து எழுந்து முடித்து விடுகின்றனர். பின்னர் நீண்ட நெடிய துஆக்கள் செய்ய தொடங்குகின்றனர். உண்மையில் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் முறையிடுவதற்காக அவருக்கு கிடைத்த நேரத்தை வெறும் ஒரு சடங்கு சம்பிரதாயமாக விரைவாக முடித்துவிட்டு கழித்து விடுகின்றனர். மேலும், இறை சன்னிதானத்தில் இருந்து வெளியேறி பின்னர் துஆ வேண்டுகின்றனர்.

தொழுகையில் துஆ வேண்டுங்கள்; தொழுகையை துஆவிற்கான ஊடகமாகவும், வழிமுறையாகவும் கருதுங்கள்.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 28, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

* * * * * * * *

## நபிமொழி

### நீதியின் முக்கியத்துவம்

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுக்கு முன்னிருந்த (சமுதாய) மக்களை இந்த விஷயம் மட்டுமே அழிவிற்குள்ளாக்கியது. அதாவது அவர்களில் வலிமை படைத்த ஒருவர் திருடினால் அவரை அவர்கள் விட்டுவிடுவதும், அவர்களில் ஏழை ஒருவர் திருடினால் அவருக்கு எதிராக தண்டனை (கொடுப்பதற்)க்கான தீர்மானம் எடுப்பதும் அவர்களின் வழக்கமாக இருந்தது. அல்லாஹ்வின் மீது ஆணையாக! ஃபாத்திமா பின்த் முஹம்மத் (ஸல்) திருடினால் பின்னர் அவருடைய கரங்களையும் கூட நான் வெட்டி விடுவேன்.

(புகாரீ, கிதாபுஸ் ஸுல்ஹ்)

### ஈமானின் இனிமை

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்து அறிவிக்கின்றார்கள்: அன்னார் (ஸல்) கூறினார்கள்: (இந்த) மூன்று விஷயங்கள் எவரிடம் இருக்குமோ அவர் ஈமானின் சுவையை பெற்றுக் கொள்கின்றார். அதாவது, அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) மற்ற எல்லா விஷயங்களைக் காட்டிலும் அவருக்கு நேசத்திற்குரியவராக இருப்பர். மேலும், அவர் எந்த மனிதரிடம் நேசம் கொண்டாலும் அல்லாஹ்விற்காகவே நேசம் கொள்வார்; மேலும் தான் நிராகரிப்பின் பக்கம் திரும்புவதை நெருப்பில் எறியப்படுவதை போன்று அவர் தீயதாக கருதுவார்.

(புகாரீ கிதாபுல் ஈமான், பாபு ஹலாவதில் ஈமான்)

* * * * * *

## ஏகத்துவத்திற்கு எதிராக இணை வைத்தலில் செய்வது என்பது எப்படிப்பட்டதென்றால், ஒருவர் உயரத்தில் இருந்து கீழே விழுந்து பின்னர் துண்டு துண்டாகி ஆகிவிடுவதைப் போன்றதாகும்

وَمَنْ يُّشْرِكْ بِاللّٰهِ فَكَاَنَّمَا خَرَّ مِنَ السَّمَآءِ
فَتَخْطَفُهُ الطَّيْرُ اَوْ تَهْوِيْ بِهِ الرِّيْحُ
فِيْ مَكَانٍ سَحِيْقٍ ۝

(22 :32)

ஹஸ்ரத் முஸ்லிஹ: மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஏகத்துவத்திற்கு மாற்றமாக இணை வைத்தல் செய்வது என்பது எப்படிப்பட்டதென்றால், ஒருவர் உயரத்தில் இருந்து கீழே விழுந்து, துண்டு துண்டாகி அந்த துண்டுகள் மிக மிக தொலைவில் வீசப்படுவதைப் போன்றதாகும்.

ஏனெனில், இணை வைப்பாளர் தனக்கு பல எஜமானர்களை உருவாக்கிக் கொள்கின்றார்; மேலும் ஒவ்வொரு எஜமானருக்கும் அவரது சதையில் உரிமை இருப்பதைப் போன்று ஆக்கிக் கொள்கின்றார்.

இந்த இடத்தில் இந்த விஷயத்தை நினைவிற் கொள்ள வேண்டும்; இணை வைத்தல் விவகாரம் என்பது பொதுவாக புரிந்து கொள்ளப்படுவதைப் போன்று அவ்வளவு எளிய விவகாரம் ஒன்றும் அல்ல ; மாறாக மிகவும் நுட்பமான விவகாரம் ஆகும். இதன் காரணமாகவே பெரும்பாலான சமுதாயங்களோ வெளிப்படையில் இணை வைத்தலுக்கு எதிரானவையாக இருக்கின்றன. ஆனால் செயல் ரீதியில் அவர்கள் இணை வைத்தலில் ஈடுபடுகின்றனர். இதற்கு காரணம் என்னவென்றால், அவர்கள் இணை வைத்தலின் அசல் நிலையை புரிய இயலாதவர்களாக இருக்கின்றனர். அசல் விஷயம் என்னவென்றால்,

இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம்....

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**பனூ முஸ்தலிக் போரின் சூழ்நிலைகள் மற்றும் சம்பவங்கள்**
**மேலும் பிரிட்டன் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடியவர்களுக்காக துஆ செய்வதற்கான அறிவுரை**

ஸஹாபா பெருமக்கள் தங்களுடைய எஜமானார் (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிக் கோத்திரத்தின் தலைவரின் மகளுக்குத் திருமண பந்தம் எனும் கண்ணியத்தை வழங்கியுள்ளார்கள் என்பதைப் பார்த்தபோது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் துணைவியார் வீட்டு மக்களைத் தங்களுடைய கையில் சிறைபிடித்து வைப்பதை நபித்துவத்தின் மேன்மைக்கு எதிராகக் கருதினார்கள். இவ்வாறு நூறு வீட்டு மக்கள், அதாவது நூற்றுக்கணக்கான கைதிகள் ஈட்டுத் தொகையின்றி ஒரேயடியாக விடுதலை செய்யப்பட்டார்கள்

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிக் போரிலிருந்து வெற்றி வாகை சூடியவர்களாக மதீனாவுக்குத் திரும்பி வந்தார்கள்

அடுத்த ஜுமுஆ பிரிட்டனின் ஆண்டு மாநாடும் துவங்கும். இன்ஷா அல்லாஹ்! அதற்காகவும் துஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. எல்லாப் பணியாளர்களுக்கும் உயர் நல்லொழுக்கத்தை காட்டியவாறு, தியாக உணர்வுடன் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக

வட இந்தியாவுக்கான நாஸிர் தஃவத்தே இலல்லாஹ் ஹமீத் கவ்ஸர் ஸாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய ஸலீமா பனூ ஸாஹிபா மதிப்பிற்குரிய நூருல் ஹக் ஸாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய அமத்துல் ஹஃபீழ் நிகஹத் ஸாஹிபா ஆகியோரின் நற்குறிப்பும் ஜனாஸா காயிப் தொழுகையும்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 19 ஜுலை 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **வஃபா** மாதம் **19 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

பனூ முஸ்தலிக் போர் பற்றி கடந்த குத்பாவில் கூறப்பட்டது. இதன் கூடுதல் விவரம் ஹதீஸ் மற்றும் வரலாற்றில் கிடைக்கின்றது. ஸஹீஹ் புகாரீயில் இந்தத் தாக்குதல் பற்றிய விவரம் இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டுள்ளது:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிக் மீது தாக்குதல் தொடுத்தபோது, அந்த மக்கள் கவனமற்றவர்களாக இருந்தனர். அவர்கள் தங்களுடைய கால்நடைகளுக்கு நீரூற்றில் தண்ணீர் புகட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் போர் புரிபவர்களைக் அன்னார் (ஸல்) கொன்றார்கள். அவர்களின் சந்ததிகளை சிறைப்பிடித்துக் கொண்டார்கள். அன்றைய தினம்தான் ஜுவைரியா அன்னாருக்குக் கிடைத்தார்கள். அறிவிப்பாளர் கூறுகின்றார்: எனக்கு இந்த நிகழ்வை அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். அவர்கள் அந்தப் படையில் இருந்தார்கள்.

வரலாற்றாசிரியர்கள் மற்றும் வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் பனூ முஸ்தலிக் போரில் இந்தத் தாக்குதல் குறித்த விவரங்களை எடுத்துரைத்தவாறு இரண்டு அறிவிப்புகளையும் எப்படிக் கூறிச் சென்று விடுகின்றார்கள் என்றால், அதனால் புகாரீயின் அறிவிப்புகளில் பனூ முஸ்தலிக் உடைய தாக்குதலின் தன்மையைப் பற்றிய எடுத்துரைப்பில் முரண்பாடு உள்ளது போன்று இருக்கின்றது. ஏனெனில், புகாரீயின் அறிவிப்பின் அடிப்படையில் முஸ்லிம்கள் திடீரென்று கவனமற்றிருக்கும் நிலையில் தாக்குதல் தொடுத்தார்கள். அறிவிப்புகளின் வேறுபாடு புகாரீக்கு விளக்கவுரை அளிக்கும் அல்லாமா இப்னு ஹஜர் அவர்களுக்கு முன்னாலும் இருந்தது. எனவே அல்லாமா இப்னு ஹஜர் இரண்டு வகையான அறிவிப்புகளையும் ஒப்புமைப்படுத்தி இவ்வாறு எழுதியுள்ளார்:

இஸ்லாமியப் படை நீரூற்றில் திடீரென்று அவர்களை வந்து சூழ்ந்தபோது, அவர்கள் சிறிது நேரம் தாக்குப் பிடித்து நின்றிருப்பதற்கான சாத்தியக் கூறு உள்ளது. பின்னர், அவர்களுக்கு மத்தியில் அணிவகுப்பு நடைபெற்றது; போரும் நடந்தது. முஸ்லிம்கள் மேலோங்கி விட்டார்கள். பனூ முஸ்தலிக் தோல்வியடைந்து விட்டார்கள். அதாவது, இமாம் புகாரீ அவர்கள் கூறியுள்ளபடி, முதலில் தாக்குதல் தொடுக்கப்பட்டபோது அவர்கள் கவனக்குறைவாக இருந்தார்கள். ஆனால், வாழ்க்கை வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளபடி, பிறகு அவர்கள் அணிவகுக்கவெல்லாம் செய்தார்கள். இரு தரப்புக்கும் மத்தியில் போர் நடைபெற்றது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீன் நூலிலும் இது தொடர்பாக, இவ்விரு நிகழ்வுகளையும் இவ்வாறு ஒப்புமைப்படுத்தியுள்ளார்கள்; அவர்கள் வாழ்க்கை வரலாறு எழுதுபவர்கள் மற்றும் ஸஹீஹ் புகாரீயின் அறிவிப்பை பற்றி எடுத்துரைத்தவாறு இவ்வாறு எழுதுகிறார்கள்:

இந்தப் போர் பற்றியே ஸஹீஹ் புகாரீயில் ஓர் அறிவிப்பு இவ்வாறு உள்ளது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிக் மீது எப்படிப்பட்ட தருணத்தில் தாக்குதல் தொடுத்தார்கள் என்றால், அவர்கள் கவனமற்றவர்களாக தங்களுடைய கால்நடைகளுக்கு தண்ணீர் புகட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால், கவனமாகப் பார்த்தாலோ இந்த அறிவிப்பு வாழ்க்கை வரலாறு எழுதுபவர்களின் அறிவிப்புக்கு முரணானது ஒன்றும் அல்ல. மாறாக, உண்மையில் இவ்விரு அறிவிப்புகள் இரு வேறு நேரங்களுடன் தொடர்புடையவை. அதாவது, நிகழ்வு இவ்வாறு உள்ளது:

இஸ்லாமிய படை பனூ முஸ்தலிக்கிற்கு அருகில் சென்றடைந்தபோது, அப்பொழுது முஸ்லிம்கள் மிகவும் அருகில் வந்து விட்டார்கள் என்பது அவர்களுக்கு தெரியாமல் இருந்தது. இஸ்லாமிய படை வரப்போவது பற்றிய தகவல் அவர்களுக்குக் கண்டிப்பாக கிடைத்து விட்டிருந்தது. அவர்கள் நிதானமாக ஒரு வரிசையற்ற நிலையில் இருந்தார்கள். அந்த நிலையையே புகாரீயின் அறிவிப்பு சுட்டிக் காட்டுகின்றது. ஆனால், அவர்களுக்கு முஸ்லிம்கள் வந்து சேர்ந்த தகவல் கிடைத்ததும் அவர்கள் தங்களுடைய நிரந்தரமான முந்தைய ஏற்பாட்டுக்கு ஏற்ப – முதலில் அவர்கள் போர் புரிய ஏற்பாடு செய்து வைத்திருந்தார்கள். அதற்கேற்ப உடனடியாக அணிவகுத்து தாக்குதல் தொடுக்க ஆயத்தமாகி விட்டார்கள். வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டது இந்த நிலையைத்தான். இந்த முரண்பாட்டுக்கு இந்த விளக்கத்தையே அல்லாமா இப்னு ஹஜர் அவர்களும் மற்ற பிற ஆய்வாளர்களும் தந்துள்ளார்கள். இதுவே சரியானதாக தென்படுகின்றது.

இந்தப் போரில் ஹஸ்ரத் ஹிஷ்ஷாம் பின் கபாபா என்ற ஒரு ஸஹாபி ஷஹீது ஆனார்கள். அவர்களுடைய நிகழ்வில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; இவர்கள் ஒரு ஸஹாபி தான் ஷஹீது ஆனார்கள். இவர்களும் தவறுதலாக ஒரு முஸ்லிம் கையாலேயே ஷஹீது ஆனார்கள். இவர்கள் பெயர் ஹஸ்ரத் ஹிஷ்ஷாம் பின் கபாபா ஆகும். இவர்களை ஓர் அன்ஸாரி ஸஹாபி ஹஸ்ரத் அவ்ஸ் (ரலி) அவர்கள் இணை வைப்பாளர்களில் ஒருவராவார் எனக் கருதி தவறுதலாக ஷஹீதாக்கி விட்டார்கள். ஹிஷ்ஷாம் அவர்கள் ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்களின் கோத்திரத்தைச்

சேர்ந்தவராக இருந்தார்கள். ஹிஷ்ஷாம் பின் கபாபா (ரலி) அவர்களின் ஷஹாதத் நிகழ்வு எப்படி ஏற்பட்டது? என்றால், இவர்கள் எதிரியைத் தேடிப் புறப்பட்டிருந்தார்கள். இவர்கள் திரும்பி வரும்போது, வேகமான சூறாவளி காற்று வீசிக் கொண்டிருந்தது. சுற்றுச்சூழல் புழுதிபடிந்திருந்தது. அந்த நிலையில் இவர்கள் அன்ஸாரி ஸஹாபியான ஹஸ்ரத் அவ்ஸ் (ரலி) அவர்களை சந்தித்தார்கள். அவர்களால் இவர்களை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. இவர்கள் இணை வைப்பாளர்களைச் சேர்ந்தவர் ஆவார்கள் என்று அவர்கள் நினைத்துக் கொண்டார்கள். எனவே ஹிஷ்ஷாம் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் தொடுத்து அவர்களை ஷஹீதாக்கி விட்டனர்.

மக்காவில் தங்கியிருந்த, ஹிஷ்ஷாம் அவர்களின் சகோதரன் பெயர் மிக்யஸ் பின் கபாபா ஆகும். அவன் மதீனாவுக்கு வந்தான். இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டான். பிழையான கொலைக்கு அதாவது தவறுதலாக கொலையுண்ட தன் சகோதரன் கொலைக்கு ஈட்டுத் தொகை கேட்டான். எனவே ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஷ்ஷாம் (ரலி) அவர்களின் சகோதரன் மிக்யாஸ் பின் கபாபாவுக்கு ஹஸ்ரத் அவ்ஸ் (ரலி) அவர்களிடமிருந்து ஈட்டுத் தொகையை பெற்றுக் கொடுத்தார்கள். அதை அவன் வாங்கிக் கொண்டான். ஆனால், ஈட்டுத் தொகை பெற்ற பின் மிக்யஸ் ஹஸ்ரத் அவ்ஸ் (ரலி) அவர்களைத் தன் சகோதரனைக் கொன்றதற்காகக் கொன்று விட்டான். மேலும் முர்தத் ஆகி குறைஷியர்களுடன் சென்று இணைந்து கொண்டான்.

இவன் திட்டம் போட்டு வந்ததாக தெரிகிறது. அரேபியாவின் பொதுவான வழக்கத்திற்கும் மாற்றமானதாக இருந்த அந்தக் கிளர்ச்சிகரமான நடைமுறையினால், அதாவது ஈட்டுத் தொகை பெற்றுக் கொண்ட பிறகும் கொலை செய்ததனால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த அநியாயமான கொலைக்குப் பழிவாங்கும் விதமாக அவனைக் கொல்லுமாறு தீர்ப்பு வழங்கினார்கள். எனவே நுமைலா (ரலி) என்ற ஒரு ஸஹாபி மக்கா வெற்றி அன்று மிக்யஸைக் கொன்றார்கள்.

இந்தப் போரின் போது வானவர்கள் மூலமாக உதவி வந்த விஷயம் கிடைக்கின்றது. உம்முல் முஃமினீன் ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் முரைஸீயாஃவில் இருந்தபோது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களிடம் வருகை தந்தார்கள்.(அப்போது) எவ்வளவு பெரிய படை வந்து விட்டது என்றால் அதனுடன் மோதும் ஆற்றல் எங்களுக்கு இல்லை என்று என் தந்தை கூறியதை நான் கேட்டேன். எவ்வளவு அதிகமான மக்கள், ஆயுதங்கள் மற்றும் குதிரைகளை நான் பார்த்துக் கொண்டிருந்தேன் என்றால் என்னால் எடுத்துரைக்கவே முடியாது.

நான் இஸ்லாத்தை ஏற்ற போது - இதை ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இஸ்லாத்தை ஏற்றபோது, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னை மணந்து கொண்ட பிறகு, நாங்கள் திரும்பி வந்ததும் நான் முஸ்லிம்களைப் பார்த்தேன். அவர்கள் எனக்கு போரின் போது தென்பட்டு வந்த அளவுக்கு, முன்னரைப் போன்று அதிக எண்ணிக்கையில் தென்படவில்லை. அப்பொழுது இது அல்லாஹ்வின் தரப்பிலிருந்தான மதிப்பச்சம் ஆகும் என்றும், அதை அவன் இணை வைப்பாளர்களின் உள்ளத்தில் போடுகின்றான் என்றும் அறிந்தேன். பனூ முஸ்தலிக்கிலிருந்து ஒரு நபர் பிற்காலத்தில் முஸ்லிம் ஆகிவிட்டிருந்தவர், இவ்வாறு கூறிவந்தார்: நாங்கள் வெள்ளை நிற ஆடவரைக் கண்டோம். அவர்கள் அப்லக், அதாவது கருப்பு, வெள்ளை நிற குதிரைகளில் அமர்ந்திருந்தார். நாங்கள் அவர்களை முன்னரும் அதற்குப் பிறகும் கண்டதில்லை.

போர் செல்வத்தைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது; போர் செல்வ ஒட்டகங்களின் எண்ணிக்கை ஈராயிரமாக இருந்தது. ஆடுகளின் எண்ணிக்கை ஐயாயிரமாக இருந்தது. சிறைபிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இருநூறு வீடுகளை உள்ளடக்கியதாக இருந்தது. சில வரலாற்றாசிரியர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

சிறைபிடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எழுநூறுக்கும் மேற்பட்டிருந்தது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பரீதா பின் ஹுஸைப் (ரலி) அவர்களை இந்த சிறைபிடிக்கப்பட்டவர்களின் கண்காணிப்பாளராக நியமித்தார்கள். அவர்களிடம் இருந்த பண்டப் பொருள்கள், ஆயுதங்கள் சேகரிப்பட்டு விட்டன. கால்நடைகள் விரட்டிக் கொண்டு வரப்பட்டன. அன்னார் அவற்றின் மீது தம் அடிமை ஹஸ்ரத் ஷுக்ரான் (ரலி) அவர்களை கண்காணிப்பாளராக நியமித்தார்கள். போர் செல்வங்களில் ஐந்தில் ஒரு பங்கு மற்றும் முஸ்லிம்களுக்கான பங்குகள் மீது ஹஸ்ரத் மஹ்மியா பின் ஜதா (ரலி) அவர்களை கண்காணிப்பாளராக நியமித்தார்கள்.

அன்னார் முழு போர்ச் செல்வங்களிலிருந்து ஐந்தில் ஒரு பங்கை எடுத்தார்கள். ஐந்தில் ஒரு பங்கு என்பது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப, போர்ச் செல்வத்தில் உள்ள ஐந்தில் ஒரு பங்காகும். அது அல்லாஹ் அவனுடைய தூதர் (ஸல்) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நெருங்கிய உறவினர்கள் மற்றும் பொதுவான இஸ்லாமிய தேவைகளுக்காக தனியாக எடுத்து வைக்கப்படுகின்றது. சிறைபிடிக்கப்பட்டவர்கள் மக்கள் மத்தியில் பகிர்ந்து கொடுக்கப்பட்டார்கள். பொருள்கள், கால்நடைகள் மற்றும் ஆடுமாடுகளும் விநியோகிக்கப்பட்டன.

நான் ஏற்கனவே கூறியது போன்று, ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் திருமண பந்தத்தில் வந்த நிகழ்வும் எழுதப்பட்டுள்ளது. பனூ முஸ்தலிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களில் எவர்கள் சிறைபிடிக்கப்பட்டிருந்தார்களோ அதில் அந்தக் கோத்திரத்தின் தலைவர் ஹாரிஸ் பின் அபீ ஸிராரின் மகள் பர்ஹாவும் இருந்தார்கள். அவர்களின் பெயரை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மாற்றி ஜுவைரியா என்று வைத்து விட்டார்கள். இவர்கள் முஸாஃபி பின் ஸஃப்வானின் திருமண பந்தத்தில் இருந்தார்கள். அவன் முரைஸீஃ போரில் கொல்லப்பட்டான்.




அந்தக் கைதிகளை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வழக்கம்போல் முஸ்லிம் போர் வீரர்கள் மத்தியில் பகிர்ந்து கொடுத்து விட்டார்கள். இந்த விநியோகத்தின் அடிப்படையில் பர்ரஹ் பின்த் ஹாரிஸ் (ரலி) அவர்கள் ஓர் அன்ஸாரீ ஸஹாபி ஸாபித் பின் கைஸ் (ரலி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்கள்.

பர்ரஹ்(ரலி) அவர்கள் சுதந்திரம் பெறுவதற்காக ஹஸ்ரத் ஸாபித் பின் கைஸ் (ரலி) அவர்களுடன் முகாதிபத் என்ற வழிமுறைப்படி உடன்படிக்கை செய்து கொண்டார்கள். முகாதிபத் என்பது ஓர் அடிமை அல்லது அடிமைப் பெண் தன் எஜமானனுடன் ஒரு குறிப்பிட்ட தொகையை செலுத்தி தான் சுதந்திரமாகி விடுவேன் என்று உடன்படிக்கை செய்து கொள்வதாகும். எவ்வாறிருப்பினும், இவர்கள் இவ்வாறு உடன்படிக்கை செய்து கொண்டார்கள்; அவர்கள் அவர்களுக்கு இந்த அளவு தொகையை - நிர்ணயிக்கப்பட்டிருந்த அந்தத் தொகை 9 ஊகியா தங்கம் ஆகும். அது 360 திர்ஹம் ஆகிறது - அதை ஈட்டுத் தொகையாக செலுத்தி விட்டால் சுதந்திரமானவராகக் கருதப்பட வேண்டும்.

இந்த உடன்பாட்டுக்குப் பிறகு பர்ரஹ் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான சமூகத்திற்குச் சென்று நிலைமை அனைத்தையும் கூறினார்கள். மேலும், நான் பனூ முஸ்தலிக்கின் தலைவரின் மகள் என்பதைக் கூறி ஈட்டுத் தொகையை செலுத்துவதில் அன்னாரின் உதவியை நாடினார்கள். இவர்களின் கதையைக் கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் தாக்கத்திற்கு உள்ளானார்கள். அநேகமாக, இவர்கள் ஒரு பிரசித்திப் பெற்ற கோத்திரத்தின் தலைவரின் மகள் ஆவார்கள்; இவர்களுடைய தொடர்பின் மூலமாக அந்தக் கோத்திரத்தில் தப்லீஃக் பணியில் எளிமை ஏற்படலாம் என்றெண்ணி அன்னார் (ஸல்) இவர்களை விடுதலை செய்து இவர்களுடன் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார்கள். எனவே அன்னார் (ஸல்) இவர்களுக்குத் தாமே தம் தரப்பிலிருந்து திருமணத் தூது வழங்கினார்கள். மேலும், இவர்கள் தரப்பிலிருந்து சம்மதம் வந்த பிறகு, அன்னார் (ஸல்) தம் தரப்பலிருந்து இவர்களுக்கான ஈட்டுத் தொகையை செலுத்தி இவர்களுடன் திருமணம் செய்து கொண்டார்கள்.

ஸஹாபா பெருமக்கள் தங்களுடைய எஜமானார் (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிக் கோத்திரத்தின் தலைவரின் மகளுக்குத் திருமண பந்தம் எனும் கண்ணியத்தை வழங்கியுள்ளார்கள் என்பதைப் பார்த்தபோது, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் துணைவியார் வீட்டு மக்களைத் தங்களுடைய கையில் சிறைபிடித்து வைப்பதை நபித்துவத்தின் மேன்மைக்கு எதிராகக் கருதினார்கள்.

இவ்வாறு நூறு வீட்டு மக்கள், அதாவது நூற்றுக்கணக்கான கைதிகள் ஈட்டுத் தொகையின்றி ஒரேயடியாக விடுதலை செய்யப்பட்டார்கள். இதன் காரணமாகவே, ஜுவைரியா தமது சமுதாயத்திற்கு மிகவும் அருளுக்குரிய நபராகத் திகழ்ந்துள்ளார் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறிவந்தார்கள். இந்தத் திருமண உறவு மற்றும் இந்தப் பேருதவியின் விளைவு என்ன ஆனது? என்றால், பனூ முஸ்தலிக் மக்கள் மிக விரைவாக இஸ்லாத்தின் போதனையால் தாக்கமடைந்து ஹஸ்ரத்

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை சுற்றியிருந்த மக்களின் வட்டத்தில் இணைந்து கொண்டார்கள்.

இவ்வாறும் ஓர் அறிவிப்பு உள்ளது: ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) அவர்களின் தந்தை ஹஸ்ரத் ஹாரிஸ் (ரலி) அவர்கள் தம் மகளுக்கான ஈட்டுத் தொகையை எடுத்துக் கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவைக்கு வந்தார்கள். மேலும், இந்த ஈட்டுத் தொகையைக் கொடுத்து ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) அவர்களை விடுதலை செய்ய வைத்த பிறகு அவர்கள் தாமும் இஸ்லாத்தை ஏற்றார்கள். பிறகு ஜுவைரியா (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் திருமணம் நடந்தது.

ஸீரத் இப்னு ஹிஷ்ஷாமில் இவ்வாறு உள்ளது; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பனூ முஸ்தலிக் போரிலிருந்து மதீனாவுக்குத் திரும்பி வந்த போது ஹஸ்ரத் ஜுவைரியா(ரலி) அவர்களின் தந்தை ஹாரிஸ் பின் அபீ ஸிரா தம் மகளுக்காக ஈட்டுத் தொகை கொடுப்பதற்காக அன்னாரிடம் வந்தார். அவர் அகீக் எனும் பகுதியை அடைந்தபோது, அவர் தன் மகளுக்கு ஈட்டுத் தொகையாகக் கொடுப்பதற்காக தன்னுடன் கொண்டு வந்திருந்த அந்த ஒட்டகங்களில் இரண்டு ஒட்டகங்கள் அவருக்கு மிகவும் பிடித்துப் போயின. அவர் அவற்றை அகீக் பகுதியின் ஒரு புதரில் ஒளித்து வைத்துவிட்டார். பிறகு அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தார். அவர் கூறினார்:

முஹம்மதே (ஸல்) ! தாங்கள் என் மகளை சிறைபிடித்துக் கொண்டீர்கள். இதோ இது அவருக்கான ஈட்டுத் தொகையாகும். அதற்கு அன்னார், நீர் அகீகின் இன்ன இன்ன புதர்களில் ஒளித்து வைத்த அந்த ஒட்டகங்கள் எங்கே? என்று கேட்டார்கள். ஹாரிஸ் கூறினார்: நான் சாட்சி பகர்கின்றேன்.

இந்த விஷயத்தால் அவர் தாக்கத்திற்குள்ளானார். அவர் கூறினார்:

அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவர் வேறு எவரும் இல்லை ; மேலும் தாங்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் (ஸல்) ஆவீர்கள். அவர் கூறினார்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வே தங்களுக்கு இதை தெரியப்படுத்தினான். ஏனெனில் அப்பொழுது அந்த ஒட்டகங்களிடத்தில் ஹாரிஸைத் தவிர வேறு எவரும் அங்கு இருக்கவில்லை.

பிறகு ஹாரிஸ் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். அவருடன் சேர்ந்து அவருடைய இரண்டு மகன்கள் மற்றும் அவரது சமுதாயத்தைச் சேர்ந்த சில மக்களும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். ஓர் அறிவிப்பில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கக் கிடைக்கிறது: ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) அவர்களின் சகோதரர் அப்துல்லாஹ் பின் ஹாரிஸ் தமது சமுதாயம் பனூ முஸ்தலிகின் கைதிகளின் ஈட்டுத் தொகையைக் கொண்டு வந்தார். ஆனால், வழியில் அவர் ஒட்டகங்களையும் எத்தியோப்பியாவின் ஓர் அடிமைப் பெண்ணையும் ஓரிடத்தில் ஒளித்து வைத்து விட்டார். இதற்குப் பிறகு, அப்துல்லாஹ் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்து சிறைபிடிக்கப்பட்டவர்களின் ஈட்டுத் தொகை பற்றி பேசினார்.

ஆகட்டும்; ஆனால், நீ ஈட்டுத் தொகையாக என்ன கொண்டு வந்துள்ளாய்? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். நான் ஒன்றுமே கொண்டு வரவில்லை என்று அவர் கூறினார். அதற்கு, நீ இன்ன இன்ன இடத்தில் ஒளித்து வைத்த அந்த இளம் ஒட்டகங்களும் கருப்பு நிற அடிமைப் பெண்ணும் எங்கே? என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள். இதைக் கேட்டதுமே அப்துல்லாஹ் கூறினார்: அல்லாஹ் ஒருவன் என்றும், முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் ஆவார்கள் என்றும் நான் சாட்சி பகிர்கின்றேன். மேலும் கூறினார்: நான் இந்த ஈட்டுத் தொகை பொருளை ஒளித்து வைத்தபோது, என்னுடன் யாரும் இருக்கவும் இல்லை ; அந்த நிகழ்வுக்குப் பிறகு எனக்கு முன் தங்களிடம் வேறு எந்த நபரும் வந்தடையவும் இல்லை. ஆக, இதற்குப் பிறகு அவர் முஸ்லிம் ஆகிவிட்டார்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் ஸீரத் காத்தமுன்னபிய்யீனில் எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) அவர்களின் திருமணம் தொடர்பாக ஓர் அறிவிப்பு இவ்வாறும் வருகிறது: அவருடைய தந்தை அவரை விடுவிப்பதற்காக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் வந்தபோது, அன்னாருடன் இருத்தலின் அருளால் அவர் முஸ்லிம் ஆகிவிட்டார். பிறகு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தரப்பிலிருந்து தூது கிடைத்ததும், அதாவது திருமணத் தூது அனுப்பினார்களோ அது. அவர் தானே சம்மதத்தோடும், பெரும் விருப்பத்துடனும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் தன் மகளுக்குத் திருமணம் செய்து வைத்து விட்டார்.

ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: கண்ணியத்திற்குரிய ஹுஸூர் (ஸல்) அவர்கள் வருகை தருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னால் நான் கனவில் பார்த்தேன் - அதாவது அன்னார் (ஸல்) அங்கு, பனூ முஸ்தலிக் பக்கம் சென்றபோது - அவர்கள் கூறுகின்றார்கள்:

சந்திரன் யஸ்ரபில் இருந்து வந்து எனக்கு அருகில் விழுவதாக நான் கனவில் பார்த்தேன். நான் யாருக்கும் எனது கனவை எடுத்துக் கூறுவதை விரும்பவில்லை. எதுவரை என்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். நாங்கள் சிறைபிடிக்கப்பட்ட போது எனக்கு அந்தக் கனவு நிறைவேறும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் என்னை விடுதலை செய்ய வைத்து என்னுடன் நிக்காஹ் செய்து கொண்ட பிறகு இறைவன் மீது ஆணையாக! நான் அன்னாரிடம் எனது சமுதாயத்தைப் பற்றி பேசவே இல்லை. நான் எனது சமுதாயத்தை விடுவிப்பது குறித்து எந்தப் பரிந்துரையும் செய்யவில்லை. எதுவரை என்றால், முஸ்லிம்கள் சுயமே அவர்களை விடுதலை செய்து விட்டார்கள். எனக்கு தெரியக் கூட இல்லை. எதுவரை என்றால், என் தந்தையின் சகோதரி வழி சகோதரி ஒருவர் எனக்குக் கூறினார். அப்பொழுது நான் அல்லாஹ்வைப் புகழ்ந்துரைத்தேன். அவர் எனக்கு இதைக் கூறினார். அதனால் நான் அல்லாஹ்வைப் புகழ்ந்துரைத்தேன்.

இப்னு ஹிஷ்ஷாம் எழுதியுள்ளார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஜுவைரியா (ரலி) அவர்களுக்கான மஹர் எனும் உரிமைத் தொகையாக நானூறு திர்ஹம் நிர்ணயித்திருந்தார்கள். எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்தப் போரிலிருந்து வெற்றி வாகை சூடியவர்களாக மதீனாவுக்குத் திரும்பி வந்தார்கள். மொத்தம் 28 நாட்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்து வெளியே இருந்தார்கள். பனூ முஸ்தலிக் போரிலிருந்து திரும்பி வந்தபோது, நயவஞ்சகர்களின் தலைவன் அப்துல்லாஹ் பின் உபை பின் ஸூலூல் வெளிப்படுத்திய அவனது நயவஞ்சகத்தின் பகிரங்கமான மற்றும் கிளர்ச்சிகரமான வெளிப்பாடு பற்றியும் வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன் விவரம் பின்வருமாறு: பனூ முஸ்தலிக்குடன் போர் முடிந்து விட்டது. முஸ்லிம்கள் தற்போது முரைஸீஃயின் கிணற்றில் இருந்தார்கள். அந்தக் கிணற்றில் நீர் மிகவும் குறைவாக இருந்தது. வாளி போடப்படும் போது, பாதி நிரம்பி வரும். பனூ கஸ்ரஜ் கோத்திரத்தின் நண்பனான ஸினான் பின் வபர் ஜுஹ்னீ கிணற்றுக்கு வந்தார். அப்போது தண்ணீரிடம் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரிகளின் ஒரு கூட்டம் இருந்தது. தண்ணீர் எடுப்பதற்காக ஸினான் பின் வபர் ஜுஹ்னீ தனது வாளியைப் போட்டார். ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களின் பணியாளர் ஜஹ்ஜாஹ் பின் மஸ்ஊது ஃகஃப்பாரியும் வாளியைப் போட்டார்.

ஸினான் மற்றும் ஜஹ்ஜாஹ்வின் வாளிகள் முட்டிக் கொண்டன. இதனால் இவர்கள் இருவரும் ஒருவர் மற்றவருடன் சண்டையிட ஆரம்பித்து விட்டார்கள். தண்ணீர் கொஞ்சமாக இருந்தது. யாருக்கும் முழு தண்ணீர் கிடைக்கவில்லை. ஜஹ்ஜாஹ் ஸினானை அடித்தார். அவருடைய இரத்தம் வழிய ஆரம்பித்தது. எனவே ஸினான் உதவிக்காக அன்ஸாரிகளே என்று குரல் கொடுத்தார். முஹாஜிர்களே! என்று ஜஹ்ஜாஹ் குரல் கொடுத்தார். ஓர் அறிவிப்பில் குறைஷிகளே! என்று அழைத்ததாக உள்ளது. இதனால் இரு கோத்திரங்களின் ஒரு கூட்டம் வந்து விட்டது. ஆயுதங்களை வெளியே எடுத்து விட்டார்கள். பெரும் குழப்பம் ஏற்பட்டிருக்கும். ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு உடனடியாகத் தகவல் கிடைத்தது. அன்னார் (ஸல்) அந்த விவகாரத்தை முடித்து வைத்தார்கள். எவ்வாறாயினும், இதன் விவரம் குறித்த சில அறிவிப்புகள் உள்ளன.

ஸஹீஹ் புகாரீயின் ஓர் அறிவிப்புக்கு ஏற்ப, சண்டைக்கான காரணமாக இது கூறப்பட்டுள்ளது. அதாவது முஹாஜிர்களில் ஒருவர் அன்ஸாரிகளில் ஒருவரின் பின்னால் காலால் உதைத்தார். அதனால் அன்ஸாரிகளே! உதவிக்கு வாருங்கள் என்று அந்த அன்ஸாரி கூறினார். மேலும் முஹாஜிர்களே! உதவிக்கு வாருங்கள் என்று அந்த முஹாஜிர் கூறினார். அவர்கள் இருவருக்கும் நடுவில் சண்டைக்கான காரணம் கிணற்றின் தண்ணீராக இருந்தது. அதிலிருந்து அன்ஸாரியின் ஒட்டகம் நீர் அருந்தியது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் வருகை தந்தபோது, அன்னார் (ஸல்) கூறினார்கள்: இந்த அறிவீன குரல்

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

எப்படி வருகிறது? நீங்கள் எல்லாம் என்ன பேசுகிறீர்கள்? இவை அறிவீனமான விஷயங்கள் ஆகும். அன்னாருக்கு முழு நிலவரமும் எடுத்துக் கூறப்பட்டது. சகோதரத்துவத்தை முடிவுக்குக் கொண்டு வரக் கூடிய அப்படிப்பட்ட பேச்சை நீங்கள் விட்டு விடுங்கள். ஒவ்வொருவரும் தன் சகோதரருக்கு உதவ வேண்டும். அவர் அநீதியிழைப்பவரானாலும் சரி; அநீதிக்குட்பட்டவரானாலும் சரி. அவர் அநீதியிழைக்கப்பட்டவர் என்றால் அவரை அநீதியை விட்டும் தடுத்திட வேண்டும். அநீதி இழைக்கப்பட்டவர் என்றால் அவருக்கு உதவிட வேண்டும்.

முஹாஜிர்களின் ஒரு கூட்டம் ஹஸ்ரத் உபாதா பின் ஸாமித் (ரலி) அவர்களிடம் பேசியது. அன்ஸாரிகளின் ஒரு கூட்டம் ஸினானிடம் பேசியது. ஸினான் தனது உரிமையை விட்டு விட்டார்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய இந்த எல்லா விஷயங்களையும் அவருக்கு எட்ட வைத்தார்கள். அவருக்குப் புரிய வைத்தார்கள். ஸினான் தனது உரிமையை விட்டு விட்டார்.

அப்துல்லாஹ் பின் உபை தனது நயவஞ்சக கூட்டாளிகள் பத்து பேருடன் அமர்ந்திருந்தான். அங்கு ஹஸ்ரத் ஸைது பின் அர்க்கம் (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஆனால், அப்போது அவர்கள் சிறு வயதுடையவராக இருந்தார்கள். அல்லது சில அறிவிப்புகள் அடிப்படையில் தற்போது பருவம் எய்திருக்கவில்லை. சில அறிவிப்புகள் அடிப்படையிலோ அவர் பருவமடைந்திருந்தார்.

குறைஷிய மக்களே! என்ற ஜஹ்ஜாஹ்வின் இந்தக் குரல் அப்துல்லாஹ் பின் உபைக்கு கேட்டது. அவனுக்கு பயங்கரமான கோபம் வந்தது. அவன் கூறினான்: இறைவன் மீது ஆணையாக! நான் இன்றைய தினத்தைப் போன்ற நாளை ஒருபோதும் கண்டதில்லை. மேலும் கூறினான்: இறைவன் மீது ஆணையாக! எனக்கோ ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்த நேரத்திலிருந்தே இந்த மார்க்கம் முற்றிலும் பிடிக்காததாக இருந்தது. ஆனால், எனது சமுதாயம் என் மீது மேலோங்கி விட்டது. அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். குறைஷிய மக்கள் எங்கள் மீது ஆட்சியாளர்கள் ஆகிவிட்டார்கள். மேலும் எங்களுடைய ஊரில் அவர்கள் அதிகரித்து விட்டார்கள். எங்களுடைய பேருதவிகளுக்கும் மதிப்பளிக்கவில்லை.

இந்த குறைஷிய மக்கள் எத்தகையவர்கள் என்றால், இப்படிக் கூறப்படுகிறதல்லவா - அவன் மிகவும் மோசமான உதாரணத்தைக் கூறினான் - உங்கள் நாயை ஊட்டி வளர்த்து விடுங்கள். அது உங்களைக் கடிக்கட்டும். அவன் கூறினான்: ஜஹ்ஜாஹ் கொடுத்த அழைப்புக் குரல் போன்ற ஒரு குரல் கேட்பதற்கு முன்னாலேயே நான் மரணித்துப் போயிருக்க வேண்டுமே! என்று நான் நினைத்தேன். நான் இங்கு இருக்கின்றேன். என்னால் இதையெல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாது.

அல்லாஹ்வின் மீதாணையாக! நாம் மதீனாவை சென்றடைந்து விட்டால், எல்லாரையும் விட கண்ணியத்திற்குரிய நபர் எல்லாரையும் விட இழிவான நபரை அங்கிருந்து வெளியேற்றி விடுவார். பிறகு அவன் தன் சமுதாயத்தில் அப்போதிருந்த மக்களை நோக்கி கவனம் செலுத்தியவாறு கூறினான்: இது நீங்கள் சுயமே உங்கள் உயிர்கள் மீது அநீதியிழைத்துக் கொண்டீர்கள். நீங்கள் அவர்களை உங்களுடைய நகரத்தில் தங்க வைத்தீர்கள். அவர்கள் அங்கேயே தங்கி விட்டார்கள். நீங்கள் உங்கள் செல்வங்களிலிருந்து அவர்களுக்கான பங்கை நிர்ணயித்தீர்கள். எதுவரை என்றால், அவர்கள் செல்வந்தர்கள் ஆகிவிட்டார்கள். இறைவன் மீது ஆணையாக! இப்போதும் நீங்கள் உங்களுடைய கைகளைத் தடுத்துக் கொள்வீர்களாயின், அவர்கள் உங்களுடைய நகரத்தை விட்டுவிட்டு வேறு ஏதாவது ஓர் ஊருக்குச் சென்றுவிடுவார்கள். நீங்கள் எல்லாம் அவர்களுக்காக செய்த அந்த விஷயங்களாலும் அந்த மக்கள் திருப்தியடைவில்லை.

அவன் பெரிதும் தூண்டி விடுவதற்கு முயற்சி செய்தான். அதாவது, நீங்கள் அவர்கள் மீது புரிந்த பேருதவியால் முஹாஜிர்களோ திருப்தியடையவில்லை. எதுவரை என்றால், நீங்கள் உங்கள் உயிர்களை மரணத்தின் அடையாளமாக ஆக்கி விட்டீர்கள். நீங்கள் அவருக்காக அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக கொல்லப்பட்டீர்கள். நீங்கள் எல்லாம் உங்கள் பிள்ளைகளை அனாதைகள் ஆக்கினீர்கள். அதன் விளைவாக நீங்கள் எண்ணிக்கையில் குறைந்து விட்டீர்கள் ; அவர்கள் அதிகமாகி விட்டார்கள்.

ஹஸ்ரத் ஸைது பின் அக்ரம் (ரலி) அவர்கள் எல்லாரையும் விட கண்ணியத்திற்குரிய நபர் எல்லாரையும் விட இழிவான நபரை அங்கிருந்து வெளியேற்றி விடுவார் என்று அப்துல்லாஹ் பின் உபை கூறிய விஷயத்தைக் கேட்டதும், அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அங்கேயே நின்று அவனிடம் கூறினார்கள்:

நீயே உனது சமுதாயத்தில் இழிவானவன் ஆவாய். நீயே தாழ்ந்தவன். ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கருணையாளனாகிய இறைவனின் தரப்பிலிருந்து ஆதிக்கமும், மேன்மையும் கொண்டுள்ளார்கள். முஸ்லிம்கள் தரப்பிலிருந்து ஆற்றல் கொண்டுள்ளவர் ஆவார்கள்.

அவர்கள் தன்மானத்தை வெளிப்படுத்தினார்கள். இதற்கு அவர்களிடம், நீ அமைதியாகிடு; நானோ வெறும் கேலி கிண்டலாக, விளையாட்டாக. வேடிக்கையாகப் பேசிக் கொண்டிருந்தேன் என்று இப்னு உபை கூறினான். அவனுக்கு அச்சமும் ஏற்பட்டது. பயந்து விட்டான். ஹஸ்ரத் ஸைது பின் அர்கம் (ரலி) அவர்கள் இந்த எல்லா விஷயங்களையும் கேட்டுவிட்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவையைச் சென்றடைந்து விட்டார்கள். அந்த நேரத்தில் அன்னாருக்கு அருகில் முஹாஜிர்கள் மற்றும் அன்ஸாரி ஸஹாபிகளின் ஒரு கூட்டமும் இருந்தது. ஸைது (ரலி) அவர்கள் அன்னாருக்கு இப்னு உபையின் எல்லா விஷயங்களையும் கூறிவிட்டார்கள்.

புகாரீயின் ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஸைது பின் அர்கம் (ரலி) அவர்கள் தம் தந்தையின் சகோதரரிடம் இந்த நிகழ்வைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். அவர்களின் தந்தையின் சகோதரர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இந்த விஷயத்தைக் கூறிவிட்டார். எனவே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உடனடியாக ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களை வரவழைத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஸைது கூறிய விஷயத்தை விரும்பவில்லை. அன்னாரது அருளுக்குரிய முகத்தின் நிறம் மாறிவிட்டது.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: பாலகனே! உனக்கு இப்னு உபை மீது கோபம் என்று நினைக்கின்றேன். ஸைது (ரலி) அவர்கள் கூறினார்கள்: இல்லை. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இந்த விஷயத்தை அவன் கூறக் கேட்டேன். அன்னார் ( ஸல்) கூறினார்கள்: உனக்கு கேட்பதில் தவறு ஏற்பட்டிருக்கும். ஸைது (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அப்படியல்ல!.

அன்னார் (ஸல்) கூறினார்கள்: உமக்கு குழம்பியிருக்கும். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, அல்லாஹ்வின் மீது ஆணையாக! அப்படியல்ல!.

படையில் இப்னு உபையின் விஷயம் பரவிவிட்டது. மக்களின் பேசுபொருளாக இந்த விஷயமே இருந்தது. அன்ஸாரி மக்கள் ஸைது (ரலி) அவர்களை பழிக்கவும், எச்சரிக்கவும் செய்யலானார்கள். மேலும், இவ்வாறு கூறலானார்கள்: நீ உனது சமுதாயத்தின் தலைவர் மீதே பழிசுமத்தியுள்ளாய்; நீ அவருக்கு எதிராக அவர் கூறாத விஷயத்தைக் கூறுகிறாய்; ஸைது (ரலி) அவர்களின் தந்தையின் சகோதரரும் கோபத்தை வெளிப்படுத்தினார். உனக்கு என்ன ஆயிற்று?; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உன்னைப் பொய்யன் என்று கூறியுள்ளார்கள். மேலும் உன் மீது கோபமடைந்து விட்டார்கள் என்று அவர் கூறினார்.

ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவன் கூறியதை நானே கேட்டேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! கஸ்ரஜில் அப்துல்லாஹ் பின் உபையை விட எனக்கு வேறு எவரும் அன்பிற்குரியவராக இருக்கவில்லை. நான் இந்த விஷயத்தை என் தந்தை கூறக் கேட்டிருந்தாலும், அதை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கண்டிப்பாகக் கூறியிருப்பேன். எனக்கோ எந்தக் கவலையும் இருக்கவில்லை - இவர்களுடைய ஈமான் மிகவும் உறுதிவாய்ந்ததாக இருந்தது - அப்துல்லாஹ் பின் உபை கூறியது போன்ற விஷயத்தை என் தந்தை கூறியிருந்தாலும், நான் அந்த விஷயத்தைக் கண்டிப்பாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குக் கூறியிருப்பேன். மேலும் நான் கூறியதை மெய்ப்பிக்கக் கூடிய விதமாக அல்லாஹ் தன் நபி (ஸல்) அவர்கள் மீது வஹீயை இறக்குவான் என்று எனக்கு நம்பிக்கை இருந்தது.

ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் இந்த சூழ்நிலையால் மிகவும் துயரத்திற்குள்ளானார்கள். அவர்களே இவ்வாறு கூறினார்கள்: எனக்கு எப்படிப்பட்ட வேதனை ஏற்பட்டது என்றால், அப்படிப்பட்ட வேதனை எனக்கு ஒருபோதும் ஏற்பட்டதில்லை. நான் என் வீட்டில் அமர்ந்திருந்தேன்.

இங்கு வீடு என்பதன் பொருள் அவர்களுடைய வெளி தங்குமிடமாகும். கூடாரம் அமைக்கப்பட்டிருந்த இடம், மதீனாவில் இருந்த வீடல்ல. ஏனெனில், இந்த முழு நிகழ்வுமே மதீனாவுக்கு வெளியில் உள்ளதாகும். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் மக்களிடமிருந்து தப்பிப்பதற்காக அவர்களுக்கு முன்னால் வருவதை விட்டு

விட்டார்கள். மக்கள் அவர்களைப் பார்த்து, நீ பொய் கூறினாய் என்று சொல்லிவிடுவார்களோ என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டது. மறுபுறம் சபையில் இருந்த அன்ஸாரிகள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வழிகாட்டல் மற்றும் ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களுக்கு வழங்கப்பட்ட பதிலைக் கேட்டதும், அவர்களில் சிலர் அங்கிருந்து எழுந்தார்கள். மேலும் அப்துல்லாஹ் பின் உபையிடம் சென்று அவனுக்குத் தகவல் கொடுத்தார்கள்.

அவ்ஸ் பின் ஃஹவ்லீ கூறினான்: அபூ ஹிபாபே, இது அவனுடைய குன்யத் பெயராக இருந்தது. நீ இந்த விஷயத்தைக் கூறியிருந்தாய் என்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்து விடு. அவர்கள் உனக்காக இஸ்திஃக்ஃபார் செய்யட்டும். நீ அதை மறுக்காதே. உன்னைப் பற்றி வஹீ ஏதும் இறங்கி உன்னை பொய்ப்பித்து விடப் போகிறது. நீ இந்த விஷயத்தைக் கூறியிருந்தால் தவ்பா செய்து கொள். அப்பொழுது ஸைது கூறிய எதையும் நான் கூறவில்லை என்று அவன் கூறினான்.

மற்றோர் அறிவிப்பில் இவ்வாறு உள்ளது: அப்துல்லாஹ் பின் உபைக்குத் தகவல் கிடைத்ததும் அவன் தானே ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவைக்கு சென்றான். மேலும், அவன் அல்லாஹ்வின் மீது ஆணையிட்டான்; மேலும், ஸைது தங்களுக்குக் கூறிய விஷயத்தை நான் கூறவில்லை என்று கூறினான். இந்தவோர் மூன்றாவது அறிவிப்பும் கிடைக்கிறது:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தாமே அப்துல்லாஹ் பின் உபை மற்றும் அவனது கூட்டாளிகளை வரவழைத்தார்கள். எனவே அவர்கள் தாம் அப்படி எதுவும் கூறவில்லை என்று ஆணையிட்டுக் கூறினார்கள். இதைக் கேட்ட அவையோரில் கண்ணியத்திற்குரிய அன்ஸாரி ஸஹாபிகள் கூறினார்கள்: பாலகனுக்கு பேச்சில் கற்பனை பிறந்திருக்கலாம். இப்னு உபை கூறியது நினைவில்லாமல் போயிருக்கலாம்.

இந்த விஷயத்தை அவர்கள் இப்னு உபையைத் தற்காத்தவாறு கூறினார்கள். ஏனெனில், அவன் தனது சமுதாயத்தில் கண்ணியமும், அந்தஸ்தும் பெற்றிருந்தான். சில மக்கள் ஸைது உண்மையைக் கூறுகிறார் என்று நினைத்தார்கள். சிலர் அவரைப் பற்றி தப்பெண்ணம் கொண்டார்கள். சிலரோ ஸைது சிறு வயதுடையவராக இருந்தாலும் உண்மையைத் தான் கூறுகிறார் என்று உறுதியாக நம்பினார்கள். எவ்வாறாயினும், பெரும்பாலானவர்கள் - பெரியவர்கள் அவரைத் தவறாகக் கருதி வந்தார்கள்.

ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இப்னு உபையின் சம்பவம் நிகழ்ந்தபோது, நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மேலான அவையில் ஆஜரானேன். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மரத்தின் நிழலில் அமர்ந்திருந்தார்கள். அன்னாருக்கு அருகில் ஒரு கருப்பு நிற அடிமை அன்னாருடைய முதுகை அமுக்கிக் கொண்டிருந்தார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களது இடுப்பில் வேதனை உள்ளது போலும்! என்று நான் பணிவுடன் கூறினேன். அதற்கு அன்னார் (ஸல்) கடந்த இரவு என்னை ஒட்டகம் கீழே தள்ளி விட்டது என்று கூறினார்கள்.

நான் பணிவுடன் கூறினேன்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே, இந்த விஷயங்களுக்குப் பிறகு நான் அசல் விஷயத்தின் பக்கம் வந்தேன். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனக்கு அனுமதி தாருங்கள்; நான் இப்னு உபையின் தலையை சீவிவிடுகின்றேன்; அவனைக் கொன்று விடுகின்றேன் என்று நான் கேட்டுக் கொண்டேன். நான் ஸஹாபிகளுக்கு அவனைக் கொல்லுமாறு கட்டளையிட்டால், அவர்கள் அவனைக் கொன்றதும், மதீனாவில் பல மக்களுக்கு இது பிடிக்காமல் போகும். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் முஹம்மத் பின் மஸ்லமாவுக்கு அவனைக் கொன்று விடுமாறு ஆணையிடுங்கள் என்று நான் பணிவுடன் கேட்டுக் கொண்டேன்.

அதற்கு அன்னார் (ஸல்) நான் என் உடனிருப்பவர்களைக் கொல்கிறேன் என்று மக்கள் பேசப்போகிறார்கள் என்று கூறினார்கள். பிறகு மக்களுக்குப் புறப்பட தாங்கள் கட்டளையிடுங்கள் என்று நான் பணிவுடன் கேட்டுக் கொண்டேன். அதற்கு அன்னார் (ஸல்) சரி! என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், புறப்பட அறிவிப்பு செய்வீராக! என்று அன்னார் (ஸல்) தாமே கூறியதாக ஓர் அறிவிப்பு கூறப்பட்டுள்ளது.

இது பொதுவாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பயணம் மேற்கொள்ளாத அந்தப் பகல் நேரமாக இருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் அவன் கண்டிப்பாகப் பேசியுள்ளான் என்று நினைத்தார்கள். அதை நிறைவேற்றுவதற்காகவே அன்னார் (ஸல்) இவ்வாறு கூறினார்கள்: இழிவான மனிதனை வெளியேற்றிவிடுவான் என்று இவன் கூறுகிறான் என்றால், சரிதான் பயணம் செய்வோம்; மதீனாவுக்குத் திரும்பிச் செல்வோம் என்ன செய்கின்றான் என்று பார்ப்போம்.

எவ்வாறு இருப்பினும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் மக்கள் மத்தியில் புறப்படுவதற்கான அறிவிப்பை செய்தேன். அப்பொழுது கடுமையான வெப்பம் இருந்தது. குளுமையான நேரத்தில் பயணம் மேற்கொள்வது அன்னாரது வழக்கமாக இருந்தது. ஆனால், இப்னு உபையின் செய்தி வந்தபோது, அப்பொழுது புறப்பட்டார்கள். எல்லாருக்கும் முதலாக அன்னாருக்கு ஸஃது பின் உபாதா கிடைத்தார்கள். உஸைத் பின் ஹுளைர் கிடைத்தார் என்று சிலர் கூறினார்கள். அவர்கள்

اَلسَّلَامُ عَلَيْكَ اَيُّهَا النَّبِيُّ
وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ

. என்று கூறினார்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

وَعَلَيْكَ السَّلَامُ
وَرَحْمَةُ اللّٰهِ وَبَرَكَاتُهُ

. என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் தங்களுக்குப் புறப்படும் வழக்கமில்லாத நேரத்தில், அந்த வெப்பத்தில் புறப்பட்டுள்ளீர்களே? என்று பணிவுடன் கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உம்முடைய தோழர் கூறிய அந்த விஷயங்கள் உம்மை வந்தடையவில்லையா? அதற்கு, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எந்தத் தோழர்? என்று அவர்கள் கேட்டார்கள். அன்னார் (ஸல்) கூறினார்கள்: அப்துல்லாஹ் பின் உபை ; அவர் மதீனாவுக்குத் திரும்பும்போது அதிக கண்ணியம் உடைய மனிதர் மதீனாவிலிருந்து அதிகம் இழிவானவரை வெளியேற்றி விடுவார் என்று கூறியுள்ளார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் விரும்பினால் அவனை மதீனாவிலிருந்து வெளியேற்றி விடுங்கள். ஏனெனில், அவன் எல்லாரையும் விட இழிவானவனும், தாங்கள் பெரும் கண்ணியத்திற்குரியவரும் ஆவீர்கள். மேலும் கண்ணியம் அல்லாஹ்வுக்கு உரியது. தங்களுக்கு உரியது; மற்றும் நம்பிக்கை கொண்டவர்களுக்கு உரியது என்று பணிவுடன் கூறினார்கள்.

பிறகு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அவனுடன் மென்மையாக நடந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வின் மீது ஆணையாக! எல்லாம் வல்ல அல்லாஹ் தங்களை மதீனாவுக்குக் கொண்டு வந்தான். அப்போது அவனுடைய சமுதாயம் அவனுக்கு மகுடம் சூடுவதற்கான ஏற்பாடு செய்து கொண்டிருந்தது. அல்லாஹ் தங்களை மதீனாவுக்குக் கொண்டு வந்ததனால், தாங்கள் (ஸல்) அவனது அரசாட்சியைப் பறித்து விட்டதாக அவன் நினைக்கின்றான் என்று பணிவுடன் கூறினார்கள்.

எவ்வாறாயினும், ஸைத் (ரலி) சரியாகத்தான் கூறினார்: அப்துல்லாஹ் பொய் கூறுகிறான் என்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஸைது கூறிய விஷயத்தில் உறுதியான நம்பிக்கை வந்து விட்டிருந்ததுதான்; ஆயினும் அந்த நேரத்தில் அன்னார் (ஸல்) சூழ்நிலைக்குப் பொருத்தமாக மௌனமாக இருந்தார்கள். மேலும், வாருங்கள்; யார் இழிவானவர்? யார் கண்ணியமானவர்? என்று மதீனாவுக்குச் சென்று பார்க்கலாம் என்று அவர்கள் கூறினார்கள். ஆனால், எவ்வாறாயினும், அவனது தவறாக இருந்தது; அவன் இந்த விஷயங்களைக் கூறினான் என்பதே கடைசியில் நிரூபணமானது.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் ஸாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள இதன் விவரத்தையும் பின்னர் எடுத்துரைப்பேன். இன்ஷா அல்லாஹ்.

அடுத்த ஜுமுஆ பிரிட்டனின் ஆண்டு மாநாடும் துவங்கும். இன்ஷா அல்லாஹ்! அதற்காகவும் துஆ செய்யுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. எல்லாப் பணியாளர்களுக்கும் உயர் நல்லொழுக்கத்தை காட்டியவாறு, தியாக உணர்வுடன் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக. வந்திருக்கும் விருந்தினர்களையும் இங்கு தனது பாதுகாப்பில் வைப்பானாக. பயணத்தில் இருப்பவர்கள் வருவதற்கான ஏற்பாடு செய்து கொண்டிருப்பவர்கள், பயணம் செய்யத் துவங்கப் போகிறவர்கள் அல்லது இனி வரவிருப்பவர்கள் ஆகிய அனைவர் மீதும் அல்லாஹ் அருள் புரிவானாக. அவர்களைப் பாதுகாப்புடன் அழைத்து வருவானாக.

நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்து அவர்களுக்கு ஜனாஸா தொழுகையை தொழ வைப்பேன். அவர்களில் முதலாவது, ஸலீமா பனூ ஸாஹிபா ஆவார்கள். இவர்கள் வட இந்தியாவுக்கான நாஸிர் தஃவத்தே இல்லல்லாஹ் ஹமீத் கவ்ஸர் ஸாஹிப்

அவர்களின் துணைவியார் ஆவார்கள். கடந்த நாட்களில் இவர்கள் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رٰجِعُوْنَ

மர்ஹூமா வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். முஹம்மத் ஹமீத் கவ்ஸர் ஸாஹிப் எழுதுகிறார்கள்: இவர்கள் ஜம்மு காஷ்மீரின் கு(ஹ)தர்வாசை சேர்ந்த மர்ஹூம் அப்துல் ஃகனீ ஸாஹிப் அவர்களின் மகளாவார்கள். அவர்கள் மவ்லவி முஹம்மத் ஹுஸைன் ஸாஹிப் அவர்கள் மூலமாக 1935 இல் பைஅத் செய்தார்கள். மலைப்பகுதிகள், பனிக்கட்டி பகுதிகள் வழியாக நடந்தும், சில பகுதிகளில் குதிரை வண்டியில் பயணித்தும் காதியான் ஆண்டு மாநாட்டுக்கு நாடு பிரிவினை வரை காதியானுக்கு வந்து கொண்டிருந்தார்கள். மேலும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பெரும் ஆர்வம் இருந்தது.

தம் துணைவியாரைப் பற்றி அவர்கள் கூறுகிறார்கள்: வாழ்வை அர்ப்பணிப்பவர்களான எங்களுக்கு வாழ்வைக் கழிப்பதற்காக சாதாரணமான தொகையே கிடைத்து வந்தது. ஆனால், மிகவும் சிக்கனமாக வாழ்வைக் கழித்து வந்தார்கள். விருந்தினர்களுக்கு விருந்தோம்பலும் செய்து வந்தார்கள். அல்லாஹ் இந்த Allowance இல் அசாதரணமான பரக்கத்தை வழங்கியுள்ளான் என்று கூறிவந்தார்கள். சிக்கனம் இருந்தது. ஒருபோதும் முறையிட்டதில்லை. சிலவேளை முறையிடக் கூடிய அந்த மக்களுக்கும் இது பாடமாகும்.

பிறகு கவ்ஸர் ஸாஹிப் கூறுகிறார்கள்: ஸ்ரீநகரில் எனது முதல் Posting நிகழ்ந்தது. அங்கிருந்து பம்பாய்க்கு மாற்றம் நிகழ்ந்தது. அங்கு பம்பாயில் சத்ர் லஜ்னாவாகத் தொண்டாற்றி வந்தார்கள். பிறகு கபாபீருக்கு பணிமாற்றம் ஆனது. அங்கு இவர்கள் எனக்கோ அரபி கற்றுக் கொள்வது கடினமானது; எனவே பெண்களிடமிருந்து பேச்சு வழக்கு அரபியைக் கற்றுக் கொள்கிறேன் என்று கூறினார்கள். பிறகு இவர்கள் கற்றுக் கொண்டார்கள். மேலும் மிகவும் விரைவில் கற்றுக் கொண்டார்கள். மேலும் அவர்களுடைய தஃலீம் மற்றும் தர்பிய்யத்தில் மிகப் பெரும் பங்களிப்பை ஆற்றினார்கள்.

86 லிருந்து 97 வரை 11 ஆண்டுகள் கபாபீரின் சத்ர் லஜ்னா இமாயில்லாஹ்வாகத் தொண்டாற்றி வந்தார்கள். லஜ்னா இமாயில்லாஹ் அமைப்பைப் புதிதாக ஒருங்கமைத்தார்கள். இஜ்திமா நடத்துவதை துவக்கி வைத்தார்கள். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களும் இவர்களைப் பாராட்டினார்கள். அதாவது ஜமாஅத் கபாபீரின் லஜ்னா இமாயில்லாஹ் இஜ்திமா நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இஜ்திமா நடந்து கொண்டிருந்தது. அது தொடர்பாக கூறினார்கள். அவர்களுடைய ஐந்தாவது இஜ்திமா என்று கூறினார்கள். பிறகு கூறினார்கள்: கபாபீர் லஜ்னா இமாயில்லாஹ் முழுக்க முழுக்க அரேபிய பெண்களை உள்ளடக்கிய லஜ்னா அமைப்பாகும். அவர்களில் ஒருவர் மட்டும் இந்தியாவில் இருந்து சென்றுள்ள காஷ்மீர் பெண்மணியாக இருக்கிறார்கள். ஆனால், அவர்களும் இப்பொழுது முற்றிலும் அரேபியர்கள் போன்று ஆகிவிட்டார்கள்.

இவர்கள் அவர்களுடன் கலந்து அவர்களுக்குத் தர்பிய்யத் செய்தார்கள். பிறகு, அவர்கள் கூறுகிறார்கள்: 1998 இல் நான் பாகிஸ்தானுக்கு திரும்பி வந்து விட்டேன். இவர்கள் என்னுடன் வந்து விட்டார்கள். உடல் நிலையும், சூழ்நிலையும் ஒத்துழைத்த வரை மர்ஹூமா ஏறத்தாழ தினமும் பைத்துத் துஆ, மஸ்ஜித் முபாரக், பைத்துத் திக்ர் மற்றும் ஹஹஷ்தி மக்பராவுக்கு நஃபில்கள் மற்றும் துஆக்கள் செய்ய சென்று வந்தார்கள்.

கபாபீரின் அமீர் ஷரீஃப் ஓதே ஸாஹிப் எழுதுகிறார்கள்: மர்ஹூமா முதல் லஜ்னா தலைவியாக நியமிக்கப்பட்டார்கள். தொடர்ச்சியாக ஆறு ஆண்டுகள் வரை இவர்கள் பொறுப்பை நிறைவேற்றி வந்தார்கள். அவர்களோ அதிகம் எழுதியிருந்தார்கள். இவர்கள் ஆறு ஆண்டுகள் என்று எழுதியுள்ளார்கள். எவ்வாறாயினும், இவர்கள் அங்கு இருந்த வரை (சத்ர்ஆக) இருந்தார்கள்.

மர்ஹூமா பல்வேறு மார்க்க தர்ஸுகள் மற்றும் மார்க்கப் பணி முஃமுரங்கள் மூலமாக லஜ்னாவின் மார்க்கக் கல்வி மற்றும் தர்பிய்யத்தில் முக்கிய பங்களித்தார்கள். தமது நல்ல முறையில் நடந்து கொள்ளும் பண்பு மற்றும் நல்லொழுக்கம் மூலமாக கபாபீர் ஜமாஅத்துடன் நல்ல தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் மர்ஹூமா வெற்றி பெற்றார்கள். விரைவாகவே அரபு பேசக் கற்றுக் கொண்டார்கள். மேலும் ஜமாஅத்தின் மகன்கள் மற்றும் மகள்களுடன் அவர்களில் ஒருவர் போன்று ஒன்று கலந்து விட்டார்கள்.

மேலும் கூறுகிறார்கள்: கடந்த 20 ஆண்டுகளில் காதியானுக்குத் திரும்பி வந்ததிலிருந்து மரணம் வரை கபாபீரின் பெண்களுடன் அப்போதும் இவர்கள் தொடர்பு வைத்திருந்தார்கள். அங்கிருந்த போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களை கவனித்து வந்தார்கள். விருந்தோம்பலில் சிறப்பான பண்பு இருந்தது. இவ்வாறே ஜமாஅத் மையங்களின் தூய்மையின் பக்கமும் கவனம் செலுத்தி வந்தார்கள்.

பின்விட்டுச் சென்றவர்களில் ஒரு மகள் மற்றும் இரண்டு மகன்கள் இருக்கின்றார்கள். இவர்களின் ஒரு மகன் முரப்பி ஆவார். அத்தாவுல் மஜீத் முபஷ்ஷீர் கவ்ஸர்; இவர் எம்.டி.ஏ அல் அரேபிய்யாவில் இங்கு யூ.கே வில் தொண்டாற்றி வருகின்றார்.தொண்டாற்றுகிறார். இவர்களின் ஒரு மகள் புஷ்ரா கவ்ஸர் ஸாஹிபா ஹாலந்தில் இருக்கின்றார்கள். டாக்டர் அய்மன் ஓதே அவர்களின் துணைவியார் ஆவார்கள். லஜ்னா இமாயில்லாஹ் ஹாலந்தில் தேசிய ஹித்மத்தே கல்க் செயலாளராகத் தொண்டாற்றுகின்றார்கள்.

இளைய மகன் ஷரீஃப் கவ்ஸர் - இவர் காதியானில் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் துணை சத்ராகவும் இருக்கின்றார். முரப்பியாகவும் உள்ளார். அது மட்டுமின்றி, ஒலி மற்றும் ஒளித் துறையின் அடிஷனல் இன்சார்ஜ் ஆகவும் இருக்கின்றார். அல்லாஹ் மர்ஹூமாவிற்கு பாவமன்னிப்பு வழங்கி அவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக. இவர்களுடைய சந்ததிகளில் இவர்களின் நன்மைகளைத் தொடரச் செய்வானாக.

இரண்டாவது நற்குறிப்பு நூருல் ஹக் மஸ்ஹர் ஸாஹிப் அவர்களுடையதாகும். லாஹூரைச் சேர்ந்தவராக இருந்தார்கள். இவர்கள் தன்ஸானியாவின் இயக்கத்தின் முரப்பி ராஃகிப் ஸியாவுல் ஹக் ஸாஹிப் அவர்களின் தந்தை ஆவார்கள். கடந்த நாட்களில் இவர்கள் மரணமடைந்து விட்டார்கள். اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رٰجِعُوْنَ

அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள்.

ராஃகிப் ஸியாவுல் ஹக் ஸாஹிப் எழுதுகிறார்கள்: இவர்களின் தந்தை வழிப் பாட்டனார் முன்ஷீ தீன் ஸாஹிப் அவர்கள் மூலமாக இவர்களின் குடும்பத்தில் அஹ்மதிய்யத் வந்தது. அவர்கள் 1905-இல் தம் சிறிய தந்தையுடன் பைஅத்துக்கான - பைஅத்தோ இவர்கள் பிற்காலத்தில் செய்தார்கள். ஆனால், 1905- இல் பைஅத்துக்கான ஆர்வத்துடன் காதியான் வந்தடைந்தார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பின்னால் நின்று தொழுவதற்கான கண்ணியமும் கிடைக்கப் பெற்றது.

பைஅத்துக்காக கேட்டுக் கொண்டார்கள். ஆனால், ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களின் உடல்நிலை சரியில்லை. பைஅத் நடைபெறாது என்று அறிவிக்கப்பட்டது. அன்று பைஅத் நடைபெறவில்லை. திரும்பி வந்து விட்டார்கள். பிறகு, ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கையில் பைஅத் செய்தார்கள். 1974 இல் இவர்கள் வாடகை வீட்டில் வாழ்ந்து வந்தார்கள். எதிரிகள் அந்த வீட்டுக்குத் தீ வைத்து விட்டார்கள். வீட்டின் எல்லாப் பொருளும் எரிந்து விட்டது. எவரும் அடைக்கலம் தரவில்லை. பிறகு, ஓர் அஹ்மதி தன் வீட்டில் தஞ்சம் அளித்தார்.

மேலும், கூறுகிறார்கள்: என் தந்தையார் மிகவும் பொறுமையுடனும்,நன்றியுடனும் அந்தச் சிறிய வீட்டில் வாழ்வைக் கழித்தார்கள். இவர்களுடைய நாவில் ஒருபோதும் எந்த முறையீடும் வந்ததில்லை. எல்லாம் எரிந்து விட்டது என்று கூறவில்லை. அதற்கு நிகராக அல்லாஹ் சிலகாலம் கழித்து இவர்களுக்கு சொந்த வீடு கட்ட நல்வாய்ப்பு வழங்கினான். இவர்கள் 1974-ம் ஆண்டில் செய்த தியாகத்துக்கு வெகுமதியாக அல்லாஹ் இதை வழங்கினான் என்றே கூறிவந்தார்கள். 1974-ல் முஃகல் பூரா பள்ளிவாசலைப் பாதுகாத்து வந்தார்கள். அப்போது அஹ்மதி அல்லாத மக்கள் பள்ளியின் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். அவர்கள் ஒரு இரும்புத் தடியால் இவர்களின் தலையில் அடித்தார்கள். அதன் காயம் தழும்பானது. ஆயுள் முழுவதும் இவர்களின் தலையில் தழும்பு இருந்தது.

மகன் கூறுகிறார்கள்: நான் என் தாயாரை எப்பொழுதும் தஹஜ்ஜுதில் அழுது மன்றாடக் கண்டுள்ளேன். தொழுகைகளைக் குறிப்பாக கடைபிடித்து வந்தார்கள். வீடு தொழுகை மையமாக இருந்தது. ஐவேளை தொழுகையில் இமாமத் செய்து வந்தார்கள். திருக்குர்ஆன் ஓதுவது மற்றும் தொழுகைகள் பக்கம் குடும்பத்தினருக்கு வலியுறுத்தி வந்தார்கள்.

மகன் கூறுகிறார்கள்: ஒருமுறை அஹ்மதிகளின் திருக்குர்ஆன் வேறு; தொழுகையை வேறு விதமாக தொழுகிறார்கள் என்று முஹல்லாவின் பள்ளிவாசலின் மவ்லவி ஒருவர், உரையாற்றிக் கொண்டிருந்தார்.

*திருக்குர்ஆனிலிருந்து...*

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

அவர்கள் கூறுகிறார்கள்: அப்பொழுது பள்ளிவாசலிலேயே எங்களுடைய ஓர் அண்டை வீட்டுக்காரர் இருந்தார். அஹ்மதி அல்லாதவர். அவர் எழுந்து நின்று விட்டார்.

அவர் கூறினார்: மவ்லவி ஸாஹிப் நீங்கள் தவறாகக் கூறுகிறீர்கள். ஏனெனில், முழு தெருவிலும் ஒரே ஒரு வீட்டிலிருந்துதான் திருக்குர்ஆன் ஓதும் ஓசை வருகிறது. அது நூருல் ஹக் அவர்களின் வீடாகும். மேலும் நாம் ஓதும் அதே திருக்குர்ஆனைத்தான் அவர் ஓதிக் கொண்டிருப்பார்.

ஆக, இன்றைய நாட்களிலோ மவ்லவி மீதான அச்சம் எவ்வளவு உள்ளது என்றால், எவரும் இந்த விஷயத்தைக் கூறமுடியாது. எவ்வாறு இருப்பினும், தமது முஹல்லாவில் மிகவும் ஒழுக்கமான இயல்புடைய சான்றோராகப் பிரசித்திப் பெற்றிருந்தார்கள். கடைசி நோயிலும் கடுமையான எதிரிகளாக இருந்த அஹ்மதி அல்லாதவர்களும் இவர்களை நலம் விசாரிக்க வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார்கள். மிகவும் வள்ளல் மனம் படைத்தவராக, ஏழைகளைக் கருத்தில் கொள்பவராக இருந்தார்கள். யாருக்கும் கூறாமல் தேவையுடையவர்களுக்கு ரேஷன் அனுப்பி வைத்து வந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் ஒரு மகனும், மூன்று மகள்களும் இருக்கின்றார்கள்.

ஒரு மகள் இயக்கத்தின் முரப்பி அலீம் மஹ்மூத் ஸாஹிப் அவர்களின் துணைவியார் ஆவார்கள். அமத்துல் மதீன் - அவர்களும் கானாவில் இருந்ததன் காரணமாக ஜனாஸாவில் கலந்து கொள்ள இயலவில்லை. மரணத்தின்போது அங்கு இருக்கவில்லை. மகன் ராஃகிப் ஸியாவுல் ஹக் ஸாஹிப் தன்ஸானியாவில் முரப்பியாக இருக்கிறார்கள். அவர்கள் அங்கு தொண்டாற்றும் நல்வாய்ப்பு பெற்றார்கள். அவர்களும் செயல்களத்தில் இருப்பதன் காரணமாக தம் தந்தையின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை.

அல்லாஹ் மர்ஹூமிற்குப் பாவமன்னிப்பு வழங்கி, அவர்களுடன் கருணையுடன் நடந்து கொள்வானாக. இவர்கள் அனைவருக்கும் பொறுமையையும், மனதைரியத்தையும் வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு அமத்துல் ஹஃபீஸ் நிக(ஹ)த் ஸாஹிபா ஆவார்கள். இவர்கள் ரப்வாவைச் சேர்ந்த மர்ஹூம் முஹம்மத் ஷஃபீ ஸாஹிப் அவர்களின் துணைவியாராக இருந்தார்கள். இவர்களும் கடந்த நாட்களில் மரணமடைந்துவிட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيْهِ رَاجِعُوْنَ

மர்ஹூமா வஸிய்யத் செய்தவராக இருந்தார்கள். ஜெர்மனியில் ஜமாஅத்தின் முரப்பி முபாரக் தன்வீர் ஸாஹிப் அவர்களின் மாமியார் ஆவார்கள். இவர்களின் மகள் அமத்துல் ஜமீல் ஃகஸாலா ஆவார்கள். அவர்கள் ஜெர்மனியின் நாயிப் சத்ர் லஜ்னாவும் ஆவார்கள்.

அமத்துல் ஜமீல் ஸாஹிபா எழுதுகிறார்கள்: என் தாயார் தொழுகை மற்றும் நோன்பை முறையாக பேணி வந்தார்கள். உயர்ப் பண்புகளைக் கொண்ட நல்ல பெண்மணியாக இருந்தார்கள். யாராவது துஆவுக்காகக் கூறினால் (துஆ செய்வதை) தன் மீது கடமையாகக் கருதி வந்தார்கள். முழு கவலையுடனும், ஈடுபாட்டுடனும் வேதனை மிகுந்த உள்ளத்துடனும் அவர்களுக்காக துஆக்களில் மூழ்கி விடுவார்கள்.

கிலாஃபத்துடன் எல்லையற்ற தரத்தை எட்டிய நன்றியுணர்வுக்கான தொடர்பு இருந்தது. பிள்ளைகளுக்கும் அதை போதித்து வந்தார்கள். ஜமாஅத் பணிகளில் மிக அதிகமாக பங்கெடுப்பவராக இருந்தார்கள். மார்க்கத்துக்குத் தொண்டு செய்வதுதான் அசல் மூலதனமாகும் என்பதை எங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். லஜ்னாவின் பல்வேறு பொறுப்புகளில் தொண்டாற்றும் நல்வாய்ப்பு கிடைத்தது. தப்லீஃக்கில் பித்து பிடிக்கும் அளவுக்கு ஆர்வம் கொண்டிருந்தார்கள். தொலைதூர பகுதிகளுக்கு நடந்தே தப்லீஃக் சென்று விடுவார்கள்.

எப்போது வரை அங்கு எதிர்ப்பு அவ்வளவு அதிகமாக இருக்கவில்லையோ அனுமதி இருந்ததோ அதுவரை இவர்கள் தப்லீஃக் செய்தார்கள். வழக்குகள் அதிகம் தொடுக்கப்பட்டு வரவில்லை. அப்பொழுது தப்லீஃக் செய்து வந்தார்கள். மருத்துவ முகாம்கள் அமைத்து வந்தார்கள். ஹோமியோபதி மருந்துகள் விநியோகித்து வந்தார்கள். இவர்களின் முயற்சிகளின் விளைவால் அல்லாஹ் இவர்களுக்கு 50 க்கும் அருகில் கனிகளை வழங்கினான். அதாவது மக்களை பைஅத் செய்ய வைப்பதற்கு இவர்களுக்கு நல்வாய்ப்பு கிடைத்தது.

உலக அடிப்படையில் குறைவாகவே கல்வி பயின்றிருந்தார்கள். ஆனால், அறிவைப் பெறுவதற்கான ஆர்வம் இருந்தது. மார்க்க நூல்கள் படித்தே மிகவும் ஆதாரப்பூர்வமாக உரையாடி வந்தார்கள். மேலும், ஒவ்வொரு நபரின் சிந்தனைத் திறனுக்கு ஏற்ப அவருடன் உரையாடி வந்தார்கள். எந்த ஒரு யாசகரும் ஒருபோதும் (அவரது) வீட்டிலிருந்து வெறுங்கையுடன் சென்றதில்லை. பெண்களுக்கும் எப்பொழுதும் இவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்: யாசிப்பதற்கு பதிலாக ஏதாவது வேலை பார்க்க முயற்சி செய்யுங்கள். பல்வேறு ஏழைப் பெண் பிள்ளைகளைத் தம் வீட்டில் வைத்து அவர்களுக்குக் கல்வியும் வழங்கினார்கள். பிறகு அவர்களின் திருமண செலவுகளை மன மகிழ்ச்சியுடன் நிறைவேற்றினார்கள். மேலும் அவர்களுடன் எப்பொழுதும் மிகவும் நல்லமுறையில் நடந்து கொண்டு வந்தார்கள்.

ஃகஸாலா ஸாஹிபா கூறுகிறார்கள்: அவர்களை சந்திக்கச் சென்றபோது, அவர்கள் கூறினார்கள்: நீ வாழ்வை அர்ப்பணித்தவள் ஆவாய்; எனவே நான் உன்னைத் தடுக்கவில்லை. நீ திரும்பிச் செல். உன்னுடைய விடுப்பைக் கழித்துக் கொள். சகோதரரும், நோய் அதிகமாக இருந்தபோது அவர்களை அழைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். அதற்கு இவர்கள் வேண்டாம்; அவள் வாழ்வை அர்ப்பணித்தவள்; அவள் இருக்கட்டும் என்று கூறினார்கள்.

பின்விட்டுச் சென்றவர்களில் இரண்டு மகன்கள் மற்றும் இரண்டு மகள்கள் இருக்கிறார்கள். மேலும் பல மகள்வழிப் பேரரர்களும், மகன் வழிப் பேரர் பேத்திகளும் இருக்கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் ஏதாவது ஒரு விதத்தில் ஜமாஅத்துக்குத் தொண்டாற்றுவதற்கு நல்வாய்ப்பு கிடைக்கிறது. இவர்கள் தமது வீட்டில் பெரும் நல்ல சூழலை உருவாக்கியிருந்தார்கள். அல்லாஹ்வின் அருளினால் இரண்டு மருமகன்களே ஜமாஅத்துக்குத் தொண்டு செய்யும் நல்வாய்ப்பு பெறுகிறார்கள். அல்லாஹ் இவர்களுக்குப் பாவமன்னிப்பு வழங்கி, இவர்களோடு கருணையுடன் நடந்து கொள்வானாக. இவர்களுடைய நன்மைகளை அடுத்து சந்ததிகளிலும் தொடரச் செய்வானாக!

தமிழாக்கம்
மவ்லவி அத்தாவுல் முஃக்னீ

* * * * * * * *

## ஸலாத்தை பரப்புங்கள்

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஸலாத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீங்கள் ஒருவரை அறிந்திருந்தாலும் அல்லது அறிந்திருக்கவில்லையென்றாலும் அவருக்கு ஸலாம் கூறுங்கள்.

உண்மையான நம்பிக்கையாளரைக் குறித்து அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் கோபத்தை விழுங்கக் கூடியவர்களாக இருப்பர். நாம் எல்லாப் புறமும் அமைதியையும், நேசத்தையும் பரப்பக் கூடியவர்களாக ஆகிவிட வேண்டும்.

(ஜுமுஆ குத்பா - ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) - 26.7. 24)

* * * * * * * *

### நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

### நபிமொழியிலிருந்து...

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)



Manufacturer and Retailer of Leather Fashion and Bags.
Specialized in the Desing and Production of Quality & Sale Online Platform
Like Flipkart, Amazon, Meesho. & Product Key Word is "Grizzly Wallet"
6294738647 mygrizzlyindia@gmail.com, www.mygrizzlyindia.com
my grizzly india
my grizzly india
my grizzly india

# ஜுமுஆ பேருரை

**பனூ முஸ்தலிக் போர் சூழ்நிலைகள் மற்றும் சம்பவங்கள்**

**மற்றும் முஹர்ரம் நாட்களில் தருத் ஷரீஃப் ஓதுவதற்கும் துஆ செய்வதற்கும் அறிவுரை**

பனூ முஸ்தலிக் கோத்திரத்தின் தலைவன் ஹாரிஸ் பின் அபீ ஸிரார் என்பவன் தமது சமுதாயத்தையும் அரேபியர்களையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போர் புரிவதற்காக ஆயத்தப்படுத்தினான். மேலும் மதீனாவில் இருந்து சுமார் 96 மைல் தொலைவில் இருந்த ஓர் இடத்தில் படையை ஒன்றுதிரட்டத் துவங்கிவிட்டான்

உதவி வழங்கப்பட்டவரே! கொல்வீராக! கொல்வீராக! என்ற முழக்கம்
பனூ முஸ்தலிக் நாளன்று முஸ்லிம்களின் முழக்கமாக இருந்தது

இந்த நாட்களில் அஹ்மதிகள் தருத் ஷரீஃப் ஓதுவது மற்றும் முஸ்லிம்களின் ஒற்றுமைக்காக குறிப்பாக துஆக்கள் செய்வதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் தங்களது நிலைமைகளையும் சிறந்தாக ஆக்குவதற்கும், மேலும் அல்லாஹ்வுடன் தொடர்பை அதிகரித்துக் கொள்வதன் பக்கமும் நாம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும்

மதிப்பிற்குரிய போன்ஜா மஹ்மூத் ஸாஹிப் ஷஹீது, மதிப்பிற்குரிய ரஷீது அஹ்மத் ஸாஹிப், மதிப்பிற்குரிய சவ்த்ரி மத்தீஉர் ரஹ்மான் ஸாஹிப் மதிப்பிற்குரிய மன்ஸூர் பேகம் ஸாஹிபா மதிப்பிற்குரிய ஸஆதத்துல்லாஹ் ஸாஹிப் போன்ற மர்ஹூம்களின் நற்குறிப்புகளும் ஜனாஸா காயிப் தொழுகையும்

---

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 12 ஜுலை 2024** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1403 ஆண்டு **வஃபா** மாதம் **12 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

**சென்ற இதழின் தொடர்ச்சி....**

அடுத்த நற்குறிப்பு என்பது நூர் ஹஸீன் ஸாஹிப் அவர்களின் மகனும், நாஸிர் உமூரே ஆமாவின் உதவியாளருமாகிய மதிப்பிற்குரிய ரஷீத் ஸாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் 87-ம் வயதில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள்.

اِنَّا لِلّٰهِ وَاِنَّا اِلَيْهِ رَاجِعُوْن

இவர்கள் காதியானில் பிறந்தார்கள். பிறப்பால் அஹ்மதியாக இருந்தார்கள். அவருடைய குடும்பத்தில் அன்னாருடைய தந்தையார் நூர் ஹஸீன் ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் 1924-ம் ஆண்டு இரண்டாவது கிலாஃபத் காலகட்டத்தில் பைஅத் செய்து அஹ்மதிய்யத்தில் இணைவதற்கு நற்பேறு பெற்றிருந்தார்கள். ரஷீத் ஸாஹிப் காதியானில் துவக்கக் கல்வியைப் பயின்றார்கள். பாகிஸ்தான் உருவான பிறகு மெட்ரிக் பயின்ற பிறகு ஜமாஅத்திற்கு தொண்டாற்ற துவங்கி விட்டார்கள். 1998-ம் ஆண்டு அன்னார் பணி ஓய்வு பெற்றுவிட்டார்கள் என்ற போதிலும், மீண்டும் பணி அமர்த்தப்பட்டார்கள். மேலும் 2021-ம் ஆண்டு வரை உடல்நலம் அனுமதித்த வரை அன்னாருக்கு தொண்டாற்றுவதற்கான நற்பேறு கிடைத்தது. மர்ஹூம் ஒட்டுமொத்தமாக சுமார் 65 ஆண்டுகள் ஜமாஅத்திற்கு தொண்டுகள் ஆற்றியுள்ளார்கள்.

எண்ணற்ற சிறப்பம்சங்களை கொண்டவராக இருந்தார்கள். அன்றாடப் பணிகளை அன்றாடம் செய்யக் கூடிய பழக்கம் கொண்டவராக இருந்தார்கள். ஜமாஅத்தின் மிகவும் நன்றியுணர்வு கொண்ட மற்றும் பொறுப்புணர்வு கொண்டவராக இருந்தது மட்டுமின்றி ஜமாஅத்தின் அனைத்து விவகாரங்களிலும் இரகசியங்களைப் பேணியவாறு தொண்டாற்றி வந்தார்கள். நேரத்தை பேணுவது அன்னாரின் சிறப்பம்சமாக இருந்தது. வஸிய்யத் அமைப்பில் அன்னார் இணைந்தார்கள். மேலும், சந்தாக்களை செலுத்துவதில் அன்னாருக்கு மிகவும் அக்கறை இருந்து வந்தது. முதல் நேரத்திலேயே சந்தாக்களை செலுத்தி வந்தார்கள். ஜமாஅத்தின் ஒவ்வொரு திட்டங்களிலும் பங்கெடுக்கக்கூடியவராக இருந்தார்கள். உறவினர்களுடன் மிகவும் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார்கள். தேவையுடையவர்களுக்கு மிகவும் மௌனமாக உதவி செய்வார்கள்; கிலாஃபத்தின் மீது அன்னாருக்கு சிறப்பான நேசமும், தொடர்பும் இருந்தது. இரண்டாவது கிலாஃபத் காலத்திலிருந்து ஐந்தாவது கிலாஃபத் வரை எல்லா காலகட்டங்களிலும் அன்னார் பல்வேறு தொண்டுகளை ஆற்றுவதற்கு நற்பேறு பெற்றார்கள். மேலும் மிகவும் நன்றியுணர்வுடன் தொண்டாற்றினார்கள். மிகவும் அமைதியாக பணி செய்யக் கூடியவராகவும், மிகவும் தன்னலமற்றவராக தொண்டாற்றக் கூடியவராகவும் அன்னார் இருந்தார்கள்.

1974 மற்றும் 1984 வரையிலான சோதனை நிறைந்த காலகட்டத்தில் முழுமையான முறையில் எதிர்ப்புகளை எதிர்கொள்வதற்கும் அன்னாருக்கு நற்பேறு கிடைத்தது. 1974-ல் எதிர்ப்பு நிறைந்த சூழலில் போலீஸ் அன்னாரை கைது செய்து விட்டது. மேலும், அவரை போலீஸ் கைது செய்து வாகனத்தில் ஃபைஸலாபாத்திற்கு கொண்டு சென்று கொண்டிருந்தது.சினீயூட் என்ற இடத்தில் எதிரிகளின் ஒரு கூட்டத்தினர் அந்த பேருந்தின் மீது தாக்குதல் நடத்தினர். அந்தப் பேருந்தில்தான் அன்னாரை போலீஸ் அழைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தது. போலீஸ் மற்றும் பேருந்தில் இருந்த ஏனைய பயணிகள் ஓடிவிட்டனர். காவலர்களும் அன்னாரை விட்டு விட்டு ஓடி விட்டனர். காவல்துறையினர் அன்னாருக்கு கைவிலங்கு போட்டிருந்தனர். ஊர்வலத்தில் கலந்து கொண்டிருந்தவர்கள் கைவிலங்கு போடப்பட்டிருந்த நிலையில் அன்னாரை கத்திகளால் தாக்கி கடுமையாக காயமடையச் செய்துவிட்டனர். பின்னர் அற்புதமான முறையில் அன்னார் உயிர் பிழைத்து விட்டார்கள். பல மாதங்கள் மருத்துவமனையில் இருந்தார்கள். அதன் பிறகு மீண்டும் சிறைச்சாலைக்கு அன்னார் மாற்றப்பட்டு விட்டார்கள். இதன் காரணமாக அன்னாரின் கைவிரல்களும் துண்டாகிவிட்டிருந்தன. அன்னாரின் முகத்திலும் காயங்கள் இருந்தன. மேலும் நீண்ட காலம் வரை பேசுவதும் கூட அன்னாருக்கு கடினமானதாக இருந்தது. ஆனால் எவ்வாறு இருப்பினும், அல்லாஹ் அன்னாரின் உயிரைக் காப்பாற்றினான்.

1979ம் ஆண்டு செப்டம்பரில் ரப்வாவில் அடிப்படையற்ற குற்றச்சாட்டின் கீழ் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்கு எதிராகவும் மற்றும் ஏனைய பொறுப்பாளர்களுக்கு எதிராகவும் வழக்குப் பதியப்பட்டது. அதில் ரஷீத் ஸாஹிப் அவர்களின் பெயரும் இருந்தது. மேலும் ஒரு நீண்ட காலமாக வழக்கு நடத்தப்பட்டு வந்தது. ரஷீத் ஸாஹிபிற்கு எதிராகவும் மேலும் மூன்று ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கு எதிராகவும் 1987-ம் ஆண்டு ரப்வாவில் மற்றொரு வழக்கு ரப்வா காவல் நிலையத்தில் பதியப்பட்டது. மேலும் பல ஆண்டுகள் வரை அன்னாருக்கு நீதிமன்றங்களுக்கு சென்று வர நேரிட்டது.

அன்னாரின் மகள் அமத்துஸ் ஸபூர் ஸாஹிபா கூறுகின்றார்கள்: ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதை பேணி வந்தார்கள். மேலும் அடியார்களுக்குரிய உரிமைகளை கருத்தில் கொள்ளக் கூடியவர்களாக இருந்தார்கள். மற்றவர்களின் துன்பங்களை தனது துன்பமாக கருதக்

கூடியவர்களாக இருந்தார்கள். மேலும், பலமுறை அன்னார் இவ்வாறு நடந்து கொண்டுள்ளார்கள். அதாவது விவகாரத்தை முடிப்பதற்காகவே தனது உரிமையை கூட விட்டு கொடுத்துள்ளார்கள்.

அன்னாரின் மகள் மேலும் கூறினார்கள்; தாயாரின் மரணத்திற்குப் பிறகு அன்னாருடன் சென்று தங்குவதற்கு நான் தீர்மானித்தேன். மேலும் பிள்ளைகளுடன் அன்னாரிடம் சென்று விட்டேன். மேலும் நான் சென்ற உடனேயே அன்னார் எனக்கு இவ்வாறு அறிவுரை வழங்கினார்கள்: அதாவது என்னுடன் தங்க வேண்டும் என்றால், பின்னர் பிள்ளைகளுக்கு இதனை புரிய வைத்து விடுங்கள். அதாவது அவர்கள் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதைப் பேண வேண்டும்; ஜமாஅத் நிகழ்ச்சிகளில் பங்கு பெற வேண்டும் ; மாலைக்கு பிறகு வீட்டை விட்டு வெளியே செல்லக் கூடாது; மேலும் ஜமாஅத் பொறுப்பாளர்கள் தரப்பிலிருந்து அழைக்கப்பட்டால் மறுக்கக் கூடாது போன்ற விஷயங்களை அறிவுரையாக முன்வைத்தார்கள்.

கூறுகின்றார்கள்: இந்த தர்ப்பியத்தால் எனக்கு மிகவும் பயன் விளைந்தது.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. அன்னாரின் பிள்ளைகள் மற்றும் சந்ததியினருக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு சவ்த்ரி அலி அக்பர் ஸாஹிப் அவர்களின் மகனும், நாயிப் நாஸிர் உமூரே ஆமாவும் ஆகிய மதிப்பிற்குரிய சவ்த்ரி மதீஉர்ரஹ்மான் ஸாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் கடந்த நாட்களில் தமது 89ம் வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

பிறப்பால் அஹ்மதியாக இருந்தார்கள். அன்னாருடைய குடும்பத்தில் அன்னாரின் தந்தையார் சவ்த்ரி அலி அக்பர் ஸாஹிப் அவர்கள் மூலமாக அஹ்மதிய்யத் தோன்றியது. அன்னார் 1916-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரண்டாவது கிலாஃபத் காலத்தில் பைஅத் செய்வதற்கான நற்பேறு பெற்றார்கள். பாகிஸ்தான் உருவான பிறகு அன்னாரின் தந்தையார் சவ்த்ரி அலி அக்பர் ஸாஹிப் அவர்களுக்கு நாயிப் நாஸிர் தஃலீம் ஆக ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கும் நற்பேறு கிடைத்தது. சவ்த்ரி மதீஉர் ரஹ்மான் ஸாஹிப் அவர்கள் தொடக்கக் கல்வியை காதியானில் பயின்றார்கள். பாகிஸ்தான் உருவான பிறகு படிப்பை முழுமை செய்து கல்வித் துறையுடன் தொடர்புடையவர்களாக ஆகிவிட்டார்கள். பணி ஓய்வு பெற்ற பிறகு ஜமாஅத் தொண்டு செய்வதற்காக அன்னார் முன் வந்தார்கள்.

மேலும் நாயிப் நாஸிர் உமூரே ஆமா என்ற ரீதியில் 25 வருடங்களுக்கும் கூடுதலாக தமது இறுதி மூச்சு வரை ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதற்கு நற்பேறு பெற்றுள்ளார்கள்.

சவ்த்ரி மதீஉர் ரஹ்மான் ஸாஹிப் எண்ணற்ற சிறப்புகளுக்கு சொந்தக்காரராக இருந்தார்கள். துவக்க வயதிலேயே வஸிய்யத் அமைப்பில் இணைவதற்கு நற்பேறு பெற்றார்கள். வஸிய்யத் கணக்கு வழக்குகளை மிகவும் தெள்ளத் தெளிவாக முறையாக வைத்திருந்தார்கள். நேரத்தை பேணுபவர்களாக இருந்தார்கள். ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதை முறையாக பேணக் கூடியவராகவும், ஜமாஅத் சந்தாக்களை முதன்மையான நேரங்களில் செலுத்தக் கூடியவராகவும் மர்ஹூம் இருந்தார்கள். கல்வியில் மிகவும் ஆர்வம் இருந்தது. எளிமையான இயல்பைக் கொண்டவராக இருந்தார்கள். எல்லாரிடமும் நட்புரீதியான மற்றும் நேசம் மிகு தொடர்பை கொண்டிருந்தார்கள். எப்போதாவது உடன் பணிபுரியும் ஊழியருடன் ஏதாவது விவகாரம் ஏற்பட்டு விட்டால், அதாவது ஏதாவது அதிருப்தியான விஷயம் நேர்ந்து விட்டால் அன்னார் முதலில் சமாதானத்திற்காக முந்திக் கொள்வார்கள். அலுவலக ரீதியாக அன்னாரிடம் என்ன கடமை கொடுக்கப்பட்டாலும் அதனை அதி விரைவாக முழுமை செய்துவிடுவார்கள். பணியை Pending வைப்பதை மிகவும் வெறுப்பார்கள். மேலும் கடைசி வரை இந்தப் பண்பை அன்னார் மேற்கொண்டிருந்தார்கள். ஒருபோதும் அலுவலகப் பணிகளை Pending ஆக வைக்க விட மாட்டார்கள். மர்ஹூம் கிலாஃபத்துடன் தொடர்புடையவர்களாக இருப்பதற்கும், ஜமாஅத் அமைப்பிற்கு கட்டுப்படுவதற்கும் எப்போதும் அறிவுரை செய்து வந்தார்கள். மேலும், கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதில் தான் அருள் இருக்கின்றது என்று தமக்கு நெருக்கமானவர்களுக்கு கூறிவந்தார்கள்; அன்னாருக்கு ஒரு மகள் இருக்கின்றார்கள்; அன்னாருக்கும், பிள்ளைகளுக்கும் இதனையே கூறிவந்தார்கள்.

அன்னாரின் மனைவியும் சில ஆண்டுகளுக்கு முன் மரணமடைந்து விட்டார்கள். ஒரேயொரு மகள்தான் இருக்கின்றார். அவருடைய கணவரும் மரணமடைந்து விட்டார். மேலும், இந்த அனைத்து துன்பங்களையும் அன்னார் மிகப் பெரிய அளவில் பொறுமையுடன் சகித்துக் கொண்டார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மர்ஹூம், முன்னாள் சத்ர் அன்ஸாருல்லாஹ் யூ.கே சவ்த்ரி இஃஜாஸுர் ரஹ்மான் ஸாஹிப் அவர்களின் சிறிய தந்தை ஆவார்கள்.

அடுத்த நற்குறிப்பு சர்கோதாவைச் சேர்ந்த மர்ஹூம் மஹ்மூத் அஹ்தம் பட்டி ஸாஹிப் அவர்களின் துணைவியார் மதிப்பிற்குரிய மன்ஸூர் பேகம் ஸாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلَّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

இவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் ஸஹாபி ஹஸ்ரத் சவ்த்ரி குலாம் ஹுஸைன் ஸாஹிப் (ரலி) அவர்களின் மருமகளாக இருந்தார்கள். அன்னாரின் குடும்பத்தில் அன்னாரின் பெரிய தந்தை சவ்த்ரி குலாம் நபி அலுூவி ஸாஹிப் மற்றும் அன்னாரின் சிறிய தந்தை மதிப்பிற்குரிய சவ்த்ரி அதா முஹம்மத் அலவி ஸாஹிப் ஆகியோர் மூலமாக தோன்றியது. இந்த இருசான்றோர்களும் சச்சாவத்னி என்ற இடத்தில் நிகழ்ந்த ஒரு முனாஸிராவைக் கேட்ட பிறகு பைஅத் செய்தனர். மர்ஹூமாவுடைய தந்தை சவ்த்ரி முஹம்மத் அப்துல்லாஹ் அலவி ஸாஹிப் பின்னர் மூன்று ஆண்டுகள் ஆய்வு செய்த பிறகு 1935-ம் ஆண்டில் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டனர். மர்ஹூமாவின் கணவர் மஹ்மூத் அஹ்மத் பட்டீ ஸாஹிப் மர்ஹூம் மற்றும் மகன் தாஹிர் மஹ்மூத் பட்டீ ஸாஹிப் ஆகியோருக்கு இறை வழிக் கைதிகளாக ஆகும் நற்பேறும் கிடைத்துள்ளது. மர்ஹூமாவின் ஒரு சகோதரர் நஸீர் அஹ்மத் அலவி ஸாஹிப் 1991-ம் ஆண்டில் அஹ்மதிய்யத்தின் பெயரால் சிந்துப் பகுதியில் ஷஹீதாக்கப்பட்டார்கள். மர்ஹூமா வஸிய்யத் செய்திருந்தார்கள். பின்விட்டுச் சென்றவர்களில் மூன்று மகள்களும், ஏழு மகன்களும் அடங்குவர். அன்னாருடைய ஒரு மகன் வாழ்வை அர்ப்பணித்தவரான ஆபித் மஹ்மூத் அலவி ஸாஹிப் ஆவார்; அவர் முரப்பி ஆவார்; மேலும் ஜாமிஆ அஹ்மதிய்யா தன்ஸானிய்யாவின் நாயிப் பிரின்ஸிபாலும் தன்ஸானிய்யா ஜமாஅத்தின் நாயிப் அமீரும் ஆவார். அன்னார் செயற்களத்தில் இருப்பதன் காரணமாக தாயாரின் ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை.

ஒரு ஜமாஅத்தின் முன்னாள் சத்ர் லஜ்னா கய்யூம் ஸாஹிபா அவர்கள் கூறுகின்றார்கள்: எனக்கு 15 வருடங்கள் லஜ்னா சத்ராக தொண்டாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. இந்தக் காலத்தில் நான் மர்ஹூமாவின் எண்ணற்ற சிறப்புகளைக் கண்டுள்ளேன். நோன்பு மற்றும் ஐவேளை தொழுகைகளை மிகவும் முறையாக நிறைவேற்றி வந்தார்கள். லஜ்னாக்களுக்கு மஸ்ஜிதிற்கு செல்வதற்கு அனுமதி இருந்த வரை முறையாக அன்னார் ஜுமுஆவில் வருகை தந்திருந்தார்கள்; எப்போதும் முதல் வரிசையில் அமர்வார்கள்.

தற்போது அங்கோ கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன ; தற்போது ஜுமுஆ தொழுவதற்கும் சரி; பெருநாள் தொழுவதற்கும் சரி பெண்கள் மஸ்ஜிதிற்குள் செல்ல முடியாது. வீட்டில் உட்கார்ந்து இருக்கின்றனர். மேலும் நமது நிலைமைகள் எப்போது சரியாகும்? மேலும் எப்போது நாம் பள்ளிக்கு செல்ல முடியும்? என்று நிம்மதியிழந்து இருக்கின்றனர்.

அவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்; அல்லாஹ் பாகிஸ்தான் மக்கள் மீது கருணை செய்வானாக.

எல்லாக் கூட்டங்களிலும் அன்னார் பங்கு பெற்றார்கள். ரமலானில் தொடர்ச்சியாக லஜ்னாக்களுடன் தராவீஹ் தொழுகையை மஸ்ஜிதில் நிறைவேற்றி வந்தார்கள். எப்போதும் தமது பிள்ளைகளையும், அவர்களின் பிள்ளைகளையும் மஸ்ஜிதுடன் தொடர்புடையவர்களாக ஆக்கிவைத்தார்கள். பிள்ளைகளுக்கு மிகச் சிறந்த தர்பிய்யத் வழங்கினார்கள். எப்போதும் பிள்ளைகளை ஜமாஅத் தொண்டுகளின் பக்கம் ஆர்வமுடையவர்களாக ஆக்கினார்கள்.

மர்ஹூமா சந்தா செலுத்தி வந்தது தொடர்பாக மர்ஹூமாவின் மகன் கைஸர் மஹ்மூத் பட்டீ ஸாஹிப் எழுதுகின்றார்கள்:




எப்போதும் தமது கை செலவிற்கு கிடைக்கும் பணத்திலிருந்து சந்தா செலுத்தி வந்தார்கள். வஸிய்யத் தொகையை கூட தாம் சேமித்து வைத்த பணத்திலிருந்து செலுத்துவார்கள். ஹிஸ்ஸா ஜாயிதாத் சந்தாவை நாங்கள் செலுத்துகின்றோம் என்று நாங்கள் வலியுறுத்திக் கூறினோம். ஆனால், நான் இறைவனின் வழியில் வஸிய்யத் செய்துள்ளேன் ; இது எனது கடமையாகும் என்று கூறி அன்னார் தெளிவாக மறுத்து விட்டார்கள். மார்க்கத்திற்காக சிறப்பான தன்மானமும், ரோசமும் கொண்டிருந்தார்கள். 1989-ம் ஆண்டில் கிராமத்தில் ஜமாஅத்தின் நிலைமைகள் கடினமாக ஆகின ; மேலும் எதிரிகள் கிராமத்தில் அஹ்மதி வீடுகளில் தீ வைத்து விட்டனர். மேலும் மஸ்ஜிதை கைப்பற்றி விட விரும்பினர். அப்போது, அன்னார் தனது கணவரிடம் கூறினார்கள். மேலும், நீங்கள் மஸ்ஜிதை நோக்கி செல்லுங்கள் ; நான் தனியாக வீட்டை காவல் காத்துக் கொள்வேன் என்று அன்னார் தமது மகன்களிடம் கூறினார்கள். அந்த நாட்களில் அன்னாரின் கணவர் மற்றும் அன்னாரின் மகன்களை போலீஸ் கைதும் செய்து விட்டது. ஆனால், இதனால் அன்னார் எந்தவகையிலும் பதற்றமடையவில்லை. அல்லாஹ் எனது கணவருக்கும், பிள்ளைகளுக்கும் ஜமாஅத்துடன் உறுதிப்பாட்டுடன் நிற்பதற்கு நற்பேறு வழங்குவானாக என்று அன்னார் இரவு முழுவதும் அழுது அழுது துஆ செய்து கொண்டிருந்தார்கள் என்று அன்னாரின் மகன்கள் கூறுகின்றார்கள்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் அன்னாரின் சந்ததிகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் மெய்காப்பாளரான மதிப்பிற்குரிய குஷி முஹம்மத் ஸாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய மாஸ்டர் ஸஆதத் அஹ்மத் ஷரீஃப் ஸாஹிப் அவர்களுடையதாகும். கடந்த நாட்களில் 83-ம் வயதில் மரணமடைந்து விட்டார்கள்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

பின்விட்டுச் சென்றவர்களில் மனைவி மட்டுமின்றி இரண்டு மகன்களும், மூன்று மகள்களும் அடங்குவர். ஒரு மகன் உஸ்மான் அஹ்மத் தாலிஃ ஸாஹிப் ஸிராலியோன் ஜமாஅத்தின் முரப்பி ஆவார்கள். அன்னார் செயற்களத்தில் இருந்ததன் காரணமாக இவர்களுடைய ஜனாஸாவில் அன்னாரால் கலந்து கொள்ள முடியவில்லை.

ஜமாஅத்தின் முரப்பி உஸ்மான் ஸாஹிப் எழுதுகின்றார்கள்: தந்தை அவர்கள் பணியின் அடிப்படையில் ஆசிரியராக இருந்தார்கள். 1963-ம் ஆண்டில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களின் குரலுக்கு செவிமடுத்தவாறு பஷீர் ஆபாத் சிந்த் பகுதிக்கு ஹிஜ்ரத் செய்து சென்றார்கள். மேலும் தஃலீமுல் இஸ்லாம் பள்ளிக் கூடத்தில் அரபி கற்பிக்கும் பணியில் நியமிக்கப்பட்டார்கள். பஷீர் ஆபாத் சிந்த் பகுதிக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு முன்னதாக தாரூர் ரஹ்மத் கர்பீ என்ற பகுதியில் வசித்து வந்தார்கள். அன்னாருக்கு ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸூல் ஸாஹிப் ராஜீகீ (ரலி) அவர்களுடன் மிகவும் நேசம் மிகுந்த தொடர்பு இருந்தது.

கூறுகின்றார்கள்: மவ்லானா ராஜீகீ ஸாஹிப் (ரலி) அவர்கள் எனது தந்தையாரை வளர்ப்பு மகனாக கூறிவந்தார்கள். மேலும் அன்னாரின் நல்இயல்பின் காரணமாக அன்னாருடன் மிகுந்த நேசத்துடன் ராஜீகீ ஸாஹிப் (ரலி) நடந்து வந்தார்கள்.

இவர்கள் எழுதுகின்றார்கள்: மவ்லவி ஸாஹிப் அன்னாரைக் கொண்டு தனிப்பட்ட பணிகளையும் செய்ய வைத்து வந்தார்கள்.ஒருவர் மவ்லானா ராஜீகீ ஸாஹிப் (ரலி) அவர்களுக்கு துஆவிற்கான நோக்கத்துடன் வேண்டுதலாக தொகை ஏதாவது கொடுத்தால், இந்த தொகையை தாருஸ் ஸியாஃபத்தில் கொடுத்து ; அதற்கான ரசீதை வாங்கிக் கொண்டு வருமாறு எனது தந்தையாரிடம் அன்னார் (ரலி) கூறுவார்கள். அந்தத் தொகையை சந்தாவாக கொடுத்து வந்தார்கள்.

கூறுகின்றார்கள்: ஒருநாள் கோடைகாலத்தில் ஹஸ்ரத் மவ்லானா ராஜீகீ (ரலி) ஸாஹிப் வீட்டிற்கு வருகை தந்தார்கள். மேலும் கதவைத் தட்டினார்கள். தந்தையார் வெளியே புறப்பட்டார்கள். மேலும், இத்தனை வெப்பத்தில் தாங்கள் ஏன் வருகை தந்தீர்கள்? என்று மவ்லானா ஸாஹிப் அவர்களிடம் கேட்டார்கள். என்னை அழைத்து இருந்தால் நான் நேரில் வந்து ஆஜராகி இருப்பேனே?

அப்போது மவ்லானா ஸாஹிப் அதற்கு பதிலுரையாக எனது தந்தையிடம் கூறினார்கள்: உமக்கு பணத்திற்கான தேவை இருந்திருந்தால் என்னிடம் நீங்களே கூறியிருக்க வேண்டியதுதானே? மவ்லானா ராஜீகீ ஸாஹிப் (ரலி) அவர்கள் மேலும் கூறினார்கள்: ஸஆதத்திற்கு பணம் தேவையுள்ளது; செல்; சென்று அவருக்கு பணம் கொடுத்து விட்டு வா! என்று அல்லாஹ் எனக்கு கட்டளை வழங்கியுள்ளான். ஹஸ்ரத் மவ்லானா ராஜீகீ (ரலி) ஸாஹிப் அவர்கள் சட்டைப்பையில் இருந்து பணத்தை வெளியே எடுத்தார்கள். மேலும் அன்னாரிடம் கொடுத்து விட்டு சென்றுவிட்டார்கள்.

இவ்வாறு அன்னாருக்கும் அல்லாஹ்வுடன் தொடர்பு இருந்தது. அதாவது செல்; சென்று அவருக்கு உதவி செய் என்று அல்லாஹ் தனது மற்றொரு நல்அடியாரின் உள்ளத்தில் எண்ணத்தை ஏற்படுத்தினான்.

கிலாஃபத்திற்கு கட்டுப்படுவதற்கான தரம் பொறாமை கொள்ளத்தக்கதாக இருந்தது.

முரப்பி ஸாஹிப் எழுதுகின்றார்கள்: சிலகாலம் முன்னர் நான் விடுமுறை எடுத்து விட்டு அன்னாரை சந்திப்பதற்காக பாகிஸ்தான் சென்றேன். அன்னாரின் உடல்நிலையைக் கண்டு, நீங்கள் உகந்ததாக கருதினால் நான் மேலும் விடுப்பு எடுக்கின்றேன் என்று நான் கூறினேன். அப்போது, அதனால் அன்னார் மிகவும் கடுமையாக கூறினார்கள்: இனி இதுபோன்ற விஷயத்தை சிந்திக்கக் கூடாது; மேலும் உங்களது நாவிலும் வரக் கூடாது என்றார்கள். காலத்தின் கலீஃபா உன்னை ஓர் இடத்தில் அமர்த்தியுள்ளார்கள். அங்கேயே அமர்ந்திருங்கள். மேலும் இறுதி மூச்சு வரை ஜமாஅத்திற்கு தொண்டாற்றி பாதுகாத்து வாருங்கள் என்று கூறினார்கள். எப்போது சகோதர, சகோதரிகளுக்கும், பயணத்தில் எப்போது சென்றாலும், தரூத் ஷரீஃப் ஓதிக் கொண்டிருங்கள் என்றும்,

لَا حَوْلَ وَلَا قُوَّةَ إِلَّا بِاللّٰهِ

என்று ஓதி வாருங்கள் என்றும் வலியுறுத்திக் கூறிவந்தார்கள்.

அன்னாருடைய ஒரு சம்பவத்தை முபஷ்ஷீர் கோந்தல் ஸாஹிப் அவர்கள் கூறியதாக அன்னார் எழுதியுள்ளார்கள்: அன்னார் பி.எட் தேர்வு எழுதிக் கொண்டிருந்தபோது, அரபி பரீட்சை மிகவும் கடினமானதாக இருந்தது.பாடத்திட்டத்திற்கு வெளியில் இருந்து சில விஷயங்கள் இருந்தன. ஆக கூறுகின்றார்கள்: தந்தையார் அவர்கள் சிறிது நேரம் கழித்து, கூடுதலாக ஒரு விடைத்தாளை வாங்கி மேலும் எழுதினார்கள்.அதன் பிறகு மீண்டும் கூடுதல் விடைத்தாள்களை வாங்கிக் கொண்டிருந்தார்கள். அதாவது அன்னார் கூடுதலாக பேப்பர்களை வாங்கிக் கொண்டே இருந்தார்கள். உடன் இருந்த தோழர்கள் அன்னாரிடம் கேட்டனர்: என்ன பேப்பர் கொடுக்கப்பட்டதோ அதில் விடைகளை முழுமையாக எழுதுவதற்கு கூட எங்களால் முடியவில்லை. ஆனால், நீயோ எழுதிக் கொண்டே இருக்கிறீயே? என்று உடன் இருந்த தோழர்கள் கேட்டனர். அன்னார் இவ்வாறு பதில் அளித்தார்கள்: எனக்கு என்ன தெரிந்து இருந்ததோ அதனை நான் எழுதிவிட்டேன். அதன் பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் يَا عَيْنَ فَيْضِ اللّٰهِ وَالْعِرْفَانِ என்று தொடங்கும் எழுபது அரபிக் கவிதைகளை நான் எழுதி விட்டேன். அதனையும் நான் எழுதிவிட்டு வந்துள்ளேன். ஏனெனில், எவரெல்லாம் அதனை படிப்பாரோ அவருக்கு குறைந்தபட்சம் தப்லீஃக்காக அமைந்து விடும். நான் தேர்ச்சி பெறுவேனா? மாட்டேனா? என்பது தெரியாது; தேர்வாளர் என்னை தேர்ச்சி ஆக்குகிறாரா? இல்லையா? என்பது தெரியவில்லை. குறைந்தபட்சம் கவிதைகளை படித்து விட்டு ஓர் அஹ்மதி எழுதியுள்ளார் அல்லது இந்தக் கவிதைகள் யாருடையது? என்ற ஓர் உணர்வு அவருக்கு ஏற்பட்டு விடக் கூடும். மேலும் அவர் பின்னர் ஆராய்ச்சி செய்வார்; மேலும் இந்த அடிப்படையில் தப்லீஃக்கிற்கான வழி திறந்து விடும். எவ்வாறு இருப்பினும் அல்லாஹ்வும் அருள் புரிந்தான். அதாவது இந்த பரீட்சையில் வெறும் மூன்று நபர்கள்மட்டுமே தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும் எனது தந்தையார் அவர்களில் ஒருவராக இருந்தார்கள்.

கூறுகின்றார்கள்: இது முற்றிலும் அல்லாஹ்வின் அருளும், கஸீதாவின் அருளும் ஆகும்.

நஃபில்கள், இறைவணக்கங்கள் மற்றும் நோன்புகளை அதிகமாக பேணி வந்தார்கள். திருக்குர்ஆன் மீது நேசம் மற்றும் திலாவத் செய்வதற்கான ஆர்வம் மிகுதியாக இருந்தது. எப்போதும் திருக்குர்ஆனின் சில சூராக்களை மெல்லியக் குரலில் ஓதிக் கொண்டே இருப்பார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கஸீதாக்களை எப்போதும் பாடிக்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

- PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
- LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
- SCANNING, RECHARGE, COLOUR XEROX,
- ALL VEHICLE INSURANCE, COURIER

NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 9 Thursday 29 AUGUST 2024 Issue No.35

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

கொண்டிருந்ததை நான் கேட்டுள்ளேன். பெரும்பாலும் கஸீதாக்களைப் படிக்கும்போது அன்னாரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நூல்களை படிப்பார்கள்; மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கண்ணிய மிகு ஸஹாபிகளின் சம்பவங்களை கூறிவந்தார்கள். குறிப்பாக ஹஸ்ரத் மவ்லானா குலாம் ரஸூல் ஸாஹிப் ராஜீகீ (ரலி) அவர்களுடைய சம்பவங்களை தமது மாணவர்களுக்கு அவசியம் கூறிவந்தார்கள். மிகுந்த உத்வேகத்துடன் அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவராக அன்னார் இருந்தார்கள். இவர்கள் இன்னும் தகுதியான சிறப்புகளை கொண்டவராக இருந்தார்கள். ஜமாஅத் நிகழ்ச்சிகளில் எப்போதும் அதிகமாக பங்கு பெற்று வந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அந்தஸ்துகளை உயர்த்துவானாக. மேலும் அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாருடைய நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

(அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், ஆகஸ்ட் 2, 2024, பக்கம் 2 - 6)

தமிழாக்கம்
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * *

**1-ம் பக்கத் தொடர்ச்சி (தஃப்ஸீரே கபீர்)......**

ஷிர்க் என்பதற்கு ஒரு பொருள் மட்டுமே இருக்கின்றது என்பதல்ல. மாறாக, பல்வேறு கோணங்களில் அந்த நோயின் உண்மைத்துவத்தை புரிந்து கொள்ள முடியும். அதனை ஒரு பொருளின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கும் வரை புரியாத புதிராகவே இருக்கும். என்னைப் பொருத்த வரை ஷிர்க் எனும் இணை வைத்தல் கீழ்கண்ட வகைப்படும்:

முதல் வகை, சமபலம் படைத்த ஒன்றுக்கு மேற்பட்ட தெய்வங்கள் இருக்கின்றன ; மேலும் அவை அனைத்தும் உலகின் ஆட்சியாளர்கள் மற்றும் தலைவர்கள் ஆவர் என்று எண்ணம் கொள்வது. இது இறைவனுக்கு இருப்பின் அடிப்படையில் வைக்கப்படும் இணை வைத்தல் ஆகும்.

இரண்டாவது, உலகின் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆளுமைகள் இருக்கின்றனர்; அவர்களிடம் சிறப்புகள் பகிரப்பட்டுள்ளன. ஒருவரிடம் ஒன்று இருக்கின்றது. மற்றொருவரிடம் வேறொரு சிறப்பு இருக்கின்றது என்ற எண்ணம் கொள்வது. இந்த ஷிர்க்கும் இறைவனுக்கு இருப்பின் அடிப்படைல் செய்யப்படும் ஷிர்க்கில் அடங்கும்.

மூன்றாவது, பணிவு மற்றும் தாழ்மை குணம் போன்றவற்றில் பல்வேறு சமுதாயங்கள் மேற்கொண்டிருக்கும் செயல்கள். அவற்றில் உச்சபட்ச தாழ்மை குணத்திற்கான வெளிப்பாடுகள் இருக்கின்றன ; அவற்றை இறைவனைத் தவிர வேறு ஒருவருக்காக மேற்கொள்வது. உதாரணமாக, ஸஜ்தா செய்தல் என்பது உச்சபட்ச மரியாதை மற்றும் பணிவின் வழிமுறையாக இருக்கின்றது. இந்த செயல் இறைவனுக்காக மட்டுமே செய்வது ஆகுமானதாகும். வேறு எவருக்கும் செய்தல் கூடாது. ஆனால் ஸஜ்தா மட்டுமின்றி பல்வேறு சமுதாயங்களில் பல்வேறு உடல் அசைவுகள் பணிவின் வெளிப்பாட்டிற்காக நடைமுறையில் இருக்கின்றன. அந்த அனைத்து விவகாரங்களையும் இறைவன் இறை வணக்கத்திற்கான அங்கமாக ஆக்கியுள்ளான். எனவே தற்போது இந்த செயல்கள் இறைவனைத் தவிர வேறு எவருக்காகவும் செய்யப்படுவது ஆகுமானதல்ல.

நான்காவது; ஷிர்க்கின் நான்காவது வகை இதுவாகும். அதாவது, மனிதன் வெளிப்படையான காரணிகளைக் குறித்து, இவற்றின் மூலம் எனது அனைத்து தேவைகளும் பூர்த்தியாகி விடும் என்று எண்ணம் கொள்வதும், மேலும் அல்லாஹ்வின் ஆதிக்கத்தின் எண்ணத்தை உள்ளத்திலிருந்து அகற்றி விடுவதும் ஆகும். மேலும், பௌதீகக் காரணிகளே தேவைகளை பூர்த்தி செய்யக் கூடியவை ஆகும் என்றும் கருதுவது. இதுவும் ஷிர்க் ஆகும். ஆயினும், இந்தப் பொருட்களில் வல்ல இறைவனின் இன்ன சக்தி இருக்கின்றது; மேலும் அவனது எண்ணத்தின் கீழ் அவற்றின் விளைவுகள் வெளிப்படும் என்று எண்ணம் கொண்டால் பின்னர் அது ஷிர்க் ஆக இருக்காது.

ஐந்தாவது: ஷிர்க்கின் ஐந்தாம் வகை இதுவாகும். அதாவது, மனிதர்களுக்கு இறைவன் வழங்காத, வல்ல இறைவனின் அந்த சிறப்பான பண்புகளை உதாரணமாக, மரணித்தவற்றை உயிர்ப்பிப்பது அல்லது ஒரு பொருளிற்கு உயிர் கொடுப்பது அல்லது இறைவனின் நிரந்தரத் தன்மை மற்றும் அழியாதத் தன்மையை வேறொருவருக்கு கொடுப்பது இதுபோன்ற விவகாரங்களில் இறைவனுடைய சிறப்புத்தன்மையை அழித்து விடுவது மேலும் அந்தப் பண்புகளில் வேறு ஒருவரை பங்குப் பெறச் செய்வது போன்றயையாகும். இறைவன் தனது விருப்பம் மற்றும் தனது கட்டளையினால் இந்தப் பண்பை அல்லது அதன் சில பகுதியை ஒரு குறிப்பிட்ட நபருக்கு கொடுத்து விட்டான் என்று கொள்கை அடிப்படையிலேயே கூறினாலும் அதுவும் ஷிர்க்கில் அடங்கும். இதுவும் இணை வைத்தலே ஆகும்.

ஆறாவது; ஆறாவது வகையான ஷிர்க் இதுவாகும். இறைவனால் படைக்கப்பட்ட காரணிகளை மனிதன் முற்றிலும் புறக்கணித்து விடுவதும், மேலும் வல்ல இறைவன் ஒரு குறிப்பான பணிக்காக நியமித்துள்ள அந்தக் காரணிகளை பயன்படுத்தாமலேயே ஒரு நபர் அல்லது ஒரு பொருள் தனது சொந்த சக்தியின் மூலம் அந்தப் பணியை முழுமை செய்து கொண்டது என்று கருதுவதும் ஆகும். உதாரணமாக, இறைவன் நெருப்பை எரிப்பதற்காக படைத்துள்ளான். தற்போது ஒரு நபர் தனது சொந்த சக்தியால் இயற்கைச் சட்டத்தில் வைக்கப்பட்டுள்ள வேறு எந்தவொரு வழிறைகளையும் பயன்படுத்தாமல் நெருப்பை மூட்டிவிட்டார் என்று ஒருவர் எண்ணம் கொள்வது ஆகும். ஆனால், இதில் மிஸ்மரிசம் போன்றவை அடங்காது. ஏனெனில் இந்த சக்திகள் சுயமே இயற்கைச் சட்டத்தில் இடம்பெற்றிருக்கின்றதே தவிர எந்தவொரு மனிதனின் சுய சிறப்புகளால் அல்ல.

ஏழாவது; ஷிர்க்கின் ஏழாம் வகை இதுவாகும். அதாவது, இறைவனுக்கு ஒரு நபரின் மீது எந்த அளவுக்கு நேசம் இருக்கின்றதென்றால் அவன் அந்த நபரின் எல்லாக் கூற்றையும் ஒப்புக் கொண்டு விடுகின்றான் என்று எண்ணம் கொள்வதாகும். ஏனெனில், அந்நிலையில் அந்த மனிதர் இறை ஆற்றல்களை பெற்றிருக்கின்றார் என்று பொருளாகி விடும்.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 43, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

* * * * * * *

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

**Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad**